தரமானதே சிறந்தது என்றல்

சொலிட்
பம்பையே வாங்குங்கள்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 3-50

When only
The best is
Good Enough

Buy
Solide Pumps

சுடர் 5: பிரமோதூத ஸ்ரீ சித்திரை மீ 24 உ. திங்கட்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 11 (07-05-1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 79

# நடுக்காட்டில் விழுந்தது ஹெலி
# அதிகாரிகள் அறுவர் பலி!

## ஆயுதபாணிகள் சுட்டனரா அல்லது காலநிலை காரணமா? ஊர்ஜிதமில்லை

கொழும்பு, மே. 7

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் ஒன்று சிகிரியா காட்டிற்குள் விழுந்து நொறுங்கியது. அதில் பயணம் செய்த விமானப்படை அதிகாரிகள் ஆறு பேர் பலியானார்கள். இச் சம்பவம் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்றது.

விழுந்து நொறுங்கிய ஹெலி சிகிரியாவில் உள்ள உல்லாசப் பயணிகள் ஹோட்டல் ஒன்றில் கொள்ளையிட்ட ஆயுதக்கோஷ்டியை காடுகளில் தேடும் பணியில் ஈடுபட்டிருந்தது.

பிரஸ்தாப ஹெலிக்கொப்டர் விமானம் காலநிலை காரணமாக விழுந்ததா அல்லது கொள்ளையர் கோஷ்டியால் சுட்டு வீழ்த்தப்பட்டதா என்பது இச்செய்தி எழுதப்படும் வரை ஊர்ஜிதப்படுத்தப்படவில்லை.

சிகிரியாவில் உள்ள உல்லாசப் பயணிகள் ஹோட்டல் ஒன்றில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு பெரும் கொள்ளை ஒன்று இடம்பெற்றது. அந்தக் ஹோட்டலில் தங்கியிருந்த உல்லாசப் பயணிகளின் சுமார் ஏழுலட்சம் ரூபா பெறுமதியான உடைமைகளை, ஆயுதம் தரித்த இளைஞர் கோஷ்டி ஒன்று கொள்ளையடித்தது. அந்த ஆயுதக் கோஷ்டியில் சுமார் 20 பேர் அங்கம் வகித்தனர்.

கொள்ளையர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில், பொலீஸாருக்கு உதவும் விதத்தில் விபத்துக்குள்ளான விமானம் ஈடுபடுத்தப்பட்டது. கொள்ளையர்கள் காடுகளில் மறைந்திருக்கலாம் என எண்ணிய ஹெலிக்கொப்டர் அங்கும் தேடுதல் நடத்தியது. அவ்வேளை அப்பகுதியில் கடுங்காற்றுடன் மழை பெய்

(5 ஆம் பக்கம் பார்க்க)

வடக்கு, கிழக்கு மாகாணத்தில்

## நிர்வாக அதிகாரிகளுக்கு போட்டிப் பரீட்சை

### விண்ணப்ப முடிவு தினம் மே 14

யாழ்ப்பாணம், ஏப் 7

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் நிர்வாக உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இம் மாகாணத்தில் நிலவும் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் பற்றாக்குறையினால் நிவாரண மற்றும் நிர்வாக வேலைகள் தாமதமாவதாகவும் -

இந்த இரு மாகாணங்களுக்குமாக தனியான போட்டிப் பரீட்சை ஒன்றை நடாத்தி நிர்வாக உத்தியோகத்தர்களை தெரிவு செய்யுமாறும் யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் ஜனாதிபதியிடம் கோரி வந்தார் என்பது தெரிந்ததே.

ஜனாதிபதியின் உத்தரவை அடுத்து பொது நிர்வாக அமைச்சு போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

கடந்த 20 ஆம் திகதி வெளி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவு நகருக்கு 50தொலைபேசி இணைப்பு

### வேலைகள் துரிதமாக நடக்கின்றன

வவுனியா, மே 7

முல்லைத்தீவு நகருக்கு 50 தொலைபேசிஇணைப்புகளை வழங்குவதற்கான வேலைகள் துரிதமாக நடைபெற்று வருவதாக தொலைத்தொடர்புத் திணைக்களத்தைச் சேர்ந்த உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதற்கென முல்லைத்தீவு அஞ்சல்அலுவலகத்தில் கிளை "எக்ஸ்சேஞ்" ஒன்றை அமைப்பதற்குரிய உபகரணங்கள் வந்து சேர்ந்துள்ளதாகவும்.

இதன் ஊடாக புதிய தொலைபேசி பாவனையாளர்கள் வெளியிடங்களுக்கான அழைப்புகளைப் பெற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தற்போது முல்லைத்தீவு அஞ்சல் அலுவலகம் மற்றும் அரசாங்க அதிபர் அலுவலகம் ஆகியவற்றுக்கு இரண்டு நேரடி தொலைபேசி வசதிகள் மட்டுமே வழங்கப்பட்டு செயற்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஓ-164)

## அன்ரனா பூட்டிய சிறுவன் மின்சாரம் தாக்கி மரணம்!

### கோண்டாவிலில் நேற்று சம்பவம்

ரி, வியின் அன்ரனாவில் பாய்ந்த மின்சாரம் 11 வயதுச் சிறுவனைப் பலியெடுத்தது.

கோண்டாவில் கிழக்கில் நேற்றுமாலை 4 மணிக்கு இந்தப் பரிதாபகரமான சம்பவம் இடம்பெற்றது.

நோபர் என்னும் அந்தச் சிறுவன் கீழே இறக்கப்பட்ட அன்ரனா பைப்பில் பூஸ்ரரைத் தானே பொருத்திவிட்டு அதனைத் தூக்கி நிறுத்த முற்பட்டபோது மின்தாக்கிற்கு இலக்கானதாகக் கூறப்படுகிறது.

சிறுவனது சடலம் யாழ். ஆஸ்பத்திரிக்கு எடுத்துவரப்பட்டு அங்குமரணவிசாரணை நடைபெற்றது.

(உ-3)

வடக்கு, கிழக்கில்

## நிவாரண வேலைகளை துரிதப்படுத்த முடிவு

யாழ்ப்பாணம், மே 7

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் நிவாரண, புனரமைப்பு வேலைகளைத் துரிதப்படுத்துவதென திருகோணமலையில் இரு தினங்கள் நடைபெற்ற மாநாட்டில் முடிவுசெய்யப்பட்டது.

வடக்கு - கிழக்கு மாகாண சபை அலுவலகத்தில் நடைபெற்ற இந்த மாநாட்டுக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் திரு. சொ. கணேசநாதன் தலைமை வகித்தார்.

வடக்கு, கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த அரசாங்க அதிபர்களும், நிவாரண, புனரமைப்பு வேலைகளுக்குப்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சுயவேலை வாய்ப்புக்கு கூட்டுறவு முறையில் கடன்!

யாழ்ப்பாணம், மே 7

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு கூட்டுறவு அடிப்படையில் சுயவேலைவாய்ப்புக்கான உதவிகளை யாழ். அரசாங்க செயலகம் வழங்க இருக்கிறது.

வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு வேலையற்று இருப்பவர்களை கூட்டுறவு ரீதியில் ஒன்று சேர்த்து கடன் வழங்கப்படும்.

ஐந்து முதல் பத்துப் பேர் வரை ஒன்றாகச் சேர்த்து ஒருவருக்கு 5 ஆயிரம் ரூபா வீதம்

( 5 ஆம் பக்கம் பார்க்க )

### மட்டுப்படுத்தப்பட்ட பணப்புழக்கம்

யாழ்ப்பாணம், மே 7

பொலீஸ் பாதுகாப்பு இன்மையால் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, மானிப்பாய், சுன்னாகம், சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளைகளில் மட்டுப்படுத்தப்பட்ட பணப் புழக்கமே நடைபெறுகிறது.

இந்த வங்கிகளில் வைப்புச் செய்யும் பணத்தில் மட்டுமே கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன.

கூடியதொகைப் பணம் எடுக்கவேண்டியவர்கள் யாழ். ஆஸ்பத்திரி வங்கிக் கிளைக்கே வரவேண்டியுள்ளது.

[ஒ-3]

### முச்சந்தி முரளி



இரண்டு நாட்டு இராணுவங்கள் சோதிச்சது போதாது எண்டு இயற்கையும் சோதிக்கப் போகுதோ......அவதான நிலைய எச்சரிக்கை பொய்க்கட்டும்......!

ஈ. சி. ஜீ. இயந்திரம் பழுது:

## வவுனியா நோயாளர் வேறு ஆஸ்பத்திரிகளுக்கு!

வவுனியா, மே 7

வவுனியா அரசினர் வைத்தியசாலையில் ஈ. சி ஜீ இயந்திரம் கடந்த ஒருமாத காலமாக பழுதடைந்து உள்ளதனால் இருதய துடிப்பு அளவீடுசம்பந்தமான பதிவுகளை உடனடியாகப் பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இருதய நோய் சம்பந்தமான நோயாளர்களில் இருதய துடிப்பு அளவீடு செய்வதற்காக அவர்களை அனுராதபுரத்திற்கோ அல்லது யாழ்ப்பாணத்திற்கோ அம்புலன்ஸ் மூலம் அனுப்ப வேண்டிய அவல நிலைநிலவுகிறது.

இக்கருவியைத் திருத்துவதற்குத்தேவையான நடவடிக்கைகளைச் சுகாதாரப் பகுதியைச் சேர்ந்த அதிகாரிகள் மேற்கொள்ளவில்லை எனக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

(ஒ-164)

யாழ். மாவட்டத்தில் கடமை புரியும்

## தொண்டர் ஆசிரியரின் விவரம் திரட்டப்படுகிறது

### நிறுத்தப்பட்டவர்களும் பதிய வேண்டும்

யாழ்ப்பாணம், மே. 7

யாழ். மாவட்ட பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியராகக் கடமை ஆற்றுபவர்களும், கடமைஆற்றி பின்னர் நிறுத்தப்பட்டவர்களும் தமது பெயர்களை எதிர்வரும் 9-ஆம் திகதிக்கு முன் பதிவு செய்துகொள்ளும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர் சங்கம் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளது.

இச் சங்கத்தின் கூட்டம் நேற்றுக் காலை 9 மணியளவில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் நடைபெற்றது.

பின்வரும் தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

★ தொண்டர் ஆசிரியர்கள் சகலரும் நிரந்தரமாக்கப்பட

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## உணவை நிலத்தில் கொட்டிய ஆஸ்பத்திரி நோயாளர்!

நெடுந்தீவு, மே 7

நோயாளர்கள் தமக்கு வழங்கப்பட்ட உணவை சாப்பிடவில்லை; நிலத்தில் கொட்டினர்.

மன நோயாளர் ஆஸ்பத்திரி ஒன்றில்தான் இப்படி நடந்திருக்கும் என்று எண்ணுகிறீர்களா? இல்லவே இல்லை

கடந்த வெள்ளிக்கிழமைநெடுந்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் இந்தச் சம்பவம் நடந்தது.

தமக்கு வழங்கப்படும் உணவு தரமற்றதாகவும், நீரில் மட்டுமே வேகவைத்த காய்கறிகள் வழங்கப்பட்டுவந்ததாகவும்-

மீன், முட்டை, பருப்பு போன்றவை வழங்கப்படுவதில்லைஎன்றும் - நோயாளர்களின் உணவுக்கு என வழங்கும் பணம் ஒழுங்காகசெலவிடப்படுவதில்லை என்றும்-

இதை சம்பந்தப்பட்ட எவரும் கவனத்தில் எடுக்கவில்லை என்றும் -

அதனை அடுத்தே உணவை நிலத்தில் கொட்டி தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது என்றும் நோயாளர்கள் உதயனுக்குத்தெரிவித்தனர்.

(ஓ-111)

ஒருலட்சம் இந்திய வம்சாவளியினர்:

## குடியமர்த்துவது பற்றி கலைஞர் புதுடில்லியுடன் கலந்து பேசுவார்

சென்னை, மே 7

இலங்கையில் உள்ள சுமார் 1லட்சம் இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களை இந்தியாவில் குடியமர்த்தினால் உண்டாகக் கூடிய சுமையை ஏற்பது குறித்து மத்திய அரசுடன் தமிழ் நாடு அரசு கலந்தாலோசனை செய்யும் என தமிழக முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த அவர் இக்குடியமர்வால் எழக்கூடிய சாதகபாதகங்கள் பற்றி தாம் புதுடில்லி அரசுடன் விவாதிக்க விருப்பதாகவும் கூறினார்.

தமிழீழப் பிரச்சினை, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடைப்பட்டது. தமிழகத்தில் விடுதலைப்புலிகளின் முகாம் எதுவுமில்லை. தமிழக மீனவர் இந்தியக் கடல் எல்லை தெரியாமல் வேற்று நாட்டுக் கடற் பிரதேசத்துள் புகுவதை தடுக்க மத்திய அரசின் உதவி கோரப்படும் எனவும் திரு. கருணாநிதி கூறினார்.

(இ-ப)

# யாழ். குடாநாட்டை இன்று சூறாவளி தாக்கும்சாத்தியம்

## மணிக்கு 40 மைல் வேகத்தில் வருமாம்!!

கொழும்பு, மே 7

யாழ்ப்பாணக் குடாநாட்டை, இன்று திங்கட்கிழமை, எந்நேரமும் சூறாவளி தாக்கக்கூடும் என்று காலநிலை அவதான நிலையம் நேற்று எச்சரித்தது.

வங்காளவிரிகுடாவில் யாழ். குடாநாட்டுக்குக் கிழக்கே 225 கிலோ மீட்டருக்கும் 230 கிலோ மீட்டருக்கும் இடையில் ஓர் இடத்தில், தாழ் பவன அமுக்கம் ஒன்று நேற்றுப் பிற்பகல் 2 மணிக்கு உருவாகியதாகவும் —

அந்த அமுக்கம், மணிக்கு 40 மைல் வேகத்தில் வீசக்கூடிய சூறாவளியாக நேற்றிரவு எட்டு மணிக்குப் பரிணமித்துவிட்டதாகவும், தெரிவிக்கப்பட்டது.

சூறாவளிக்குரியபவன அமுக்கம் மேற்குத்திசை நோக்கி நகர்ந்துகொண்டிருந்ததாக அப்போது அறிவிக்கப்பட்டது.

இன்று திங்கட்கிழமை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் மழை தொடர்ச்சியாகப் பெய்யும் என்றும் கடும் காற்று வீசும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை வடக்கு—கிழக்கு மீனவர்களை நாளை ஏழாம்திகதிவரை கடலுக்குச் செல்லவேண்டாம் என்றும் நேற்று எச்சரிக்கை விடுக்கப்பட்டது. வடக்கு தொடக்கம் வடகிழக்கு வரையான கடலோரத்தில் பெரும் அலை வீசும் என்றும் சடுங்காற்று அடிக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு, மன்னார், மலையகம், கொழும்பு ஆகிய பகுதிகளில் இடியுடன் கூடிய கடும் மழை பெய்தது. மட்டக்களப்பில் 44·4 மி மீ. மழையும், மன்னாரில் 36 மி. மீ. மழையும் நேற்றுப் பதிவாகியதாக வானிலை அவதான நிலையம் அறிவித்தது.

[அ-உ]

## தமிழ்நாட்டுக்கரையோரங்களை சூறாவளி தாக்கும் அபாயம்

சென்னை, மே. 7

வங்காள விரிகுடாவில் உருவான பவன அமுக்கம் தீவிரமடைந்துசூறாவளியாக மாற்றம் அடைந்து வருவதாக இந்திய வானிலை அவதான நிலையம் நேற்று தெரிவித்தது.

தமிழ்நாட்டின் நாகபட்டினம் நெலூர் கரையோரங்களை இச் சூறாவளி மணிக்கு சுமார் 120—130 கிலோ மீற்றர் வேகத்துடன் தாக்கும் எனவும் புதுக்கோட்டை நாகபட்டினக் கரையோரங்கள் சுமார் 80—90 கிலோ மீற்றர் வேகத் தாக்குதலைச் சந்திக்கும் எனவும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த சில மணி நேரங்களில் தமிழ்நாட்டில் இடிமுழக்கத்துடனும் பெரும் காற்றுடனும் மழை பெய்யலாம்

(5 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

07-05-1990

திங்கட்கிழமை சித்திரை24

சுபநேரம்:

11-55 முதல் 01-25 வரை

இராகுகாலம்

07-25 முதல் 08-55 வரை

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்.

## சந்திரிகாவை நீக்க ஒஹி பிரிவு நேற்று முடிவு

கொழும்பு, மே 7

ஸ்ரீலங்க மக்கள் கட்சியின் இன்னொரு பிரிவின் தலைவியான திருமதி சந்திரிகா குமாரணதுங்காவையும் வேறு 29 உறுப்பினர்களையும் கட்சியில் இருந்துநீக்குவது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு ஒஸி அபயகுணசேகரா தலைமையிலான ஸ்ரீலங்கா மக்கள்கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்றுக் கூடிய போது இதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நீக்கப்பட்ட உறுப்பினர்களில் 12 பேர் மாகாணசபை உறுப்பினர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

[ஓ-உ]

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் கிணற்றுடன் 1½ பரப்பு வெறும் காணியும் பக்கத்தில் கடை போடக் கூடிய 4 அறைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச. சிதம்பரநாதன் (சேவையர்) கச்சாய் தெற்கு, கொடிகாமம் அல்லது ஆ. ஆறுமுகராசா, மரக்கறி வியாபாரி மார்கற், சாவகச்சேரி.
(3431)

6 வாரங்கள் நிரம்பியஆண் பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இறிஸ்ரி 261/10. கொழும்புத்துறை வீதி. கொழும்புத்துறை (கணக்கர் சந்தி அருகாமை) (13036)

பருத்தித்துறையில் 2 ஆம் குறுக்குத் தெரு மீன் சந்தைக்கு அருகாமையில் 1½ பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி; Auto Cool Engineering Kanthappa Segeram Lane, (Near Santhi cinema) Jaffna.
[3435]

கோவில் தேவைகட்கு உபயோகிக்க கூடிய 6 K.V.5K V 2K.Vமண்ணெண்ணெய்டீசல் (Single 3 Phase) ஜெனறேட்டர்களும் 11H P Air Cool Petter டீசல் என்ஜின் ஒன்றும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- யூனிவேர்சல் சேல்சர், இல 15, ஆடியபாத வீதி. கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (கல்வியங்காடு சந்தியிலிருந்து 100யார் தூரத்தில்)
(3436)

பல வர்ணங்களில் வளர்ப்பு மீன்கள் விற்பனைக்குண்டு. ஸ்கிப்ஸ் அக்கூரியம் 37/6, ஸ்ரான்லி வீதி, (மஸ்கன்ஸ் கட்டிட அருகில்) யாழ்ப்பாணம்.
(3507)

நல்ல இன ஒருமாதம் நிரம்பிய அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு அரியரத்தினம், மார்சட் றோட், (பேக்கரி முன்பாக) கொக்குவில் மேற்கு.
(13028)

## A/L விலங்கியல்

புதிய உயர்தர விலங்கியல் பகுதி II சரப்பான், தேரை விளக்கப் படங்களுடன் உள்ளடக்கிய அரிய நூல். ஆசிரியர் K. சங்கரஐயர், BSc. வெளியீடு. விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்
(சி/4495)

## விற்பனைக்கு

1 ஸ்ரீ Ford Prefect கார், டீசலில் இயங்கும் 5 K V லைட் எஞ்சின், Honda புதிய மொடல் M. B. X. - 125, C - 50, யமகா சபி, மோட்டார் சைக்கிள்களும் விற்பனைக்குண்டு. 136, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(13039)

## சஞ்சிகை விற்பனைக்கு

க. பொ. த. (உயர்தர) மாணவர்களுக்கான பொருளியலாளன்செப் /டிசம்பர் 1989 மார்ச் 1990 விற்பனையாகின்றது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு வழங்கப்படும் மண்டேலா ரேடர் (புத்தகசாலை) இல. 2 பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (3235)

## காணிவிற்பனைக்கு

நல்லூர் பண்டாரக்குள பிள்ளையார் கோவில் வீதிக்கு அண்மையில் குடிநீர் கிணற்றுடன் 15 நிலப்பரப்பு காணி உடன் விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ், 76, பெரியகடை, யாழ்ப்பாணம்.
(3428)

## சஞ்சிகைகள் ஓடர்

மங்கை, அம்புலிமாமா, ஆனந்தவிகடன், கல்கண்டு, கோகுலம், இரத்தினபாலா, பாலமித்திரா, சுமங்கலி, யூனியர் விகடன், போஸ்ட் இந்தியா ருடே, FRONT LINE, SPORT STAR, ஞானபூமி, பொருளியல் நோக்கு மற்றும் எல்லா இந்திய இலங்கை சஞ்சிகைகள் மீண்டும் ஓடர் செய்யலாம். ஸ்ரீகாந் புத்தகசாலை, No.165 மின்சாரநிலையவீதி, பஸ்நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (C/4343)

## தேவை

தமிழ், ஆங்கில எழுத்துக் கோப்பாளர் (கொம்போசிங்) பயிற்சியாளர் தேவை. இருபாலாரும்விண்ணப்பிக்கலாம். பயிற்சிக் காலத்தில் பயிலுநர் வேதனம் வழங்கப்படும். நேரில் வரவும் செட்டியார் அச்சகம் 430, K.K.S. Road, யாழ்ப்பாணம். [4380]

சமையற்காரர் 3, சமையல் உதவியாளர் 2, பரிமாறுபவர்கள் 4, காசாளர் 1, கணக்காளர் 2. 07 - 05 - 90 திங்கட்கிழமை நேரடித் தொடர்பு Grill Chinese Inn 181, Palaly Road, Kondavil. தாமதியாது தொடர்பு கொள்ளவும்
(12998)

## உணவுசேவை

உங்கள் நாளாந்த வைபவ ஓடர்களுக்கு (புரியாணி, பிறைட்றைஸ், நூடில்ஸ் வகைகள் சூப்வகைகள்) நாடவேண்டிய இடம் உங்களின் கிறில் - சைனிஸ்இன் இல 181, பலாலி வீதி, கோண்டாவில் பழைய இடத்தில் இருந்து, 200 மீற்றர் தொலைவில். (12999)

## A /L இரசாயனம்

A/L 91 அசேதன இரசாயனம் ஆரம்பம் 8-5-1990 செவ்வாய் 6.30am செவ்வாய் வியாழன் 6.30 a.m ஆசிரியர் சத்தீஸ், 108, Brown Road. (3434)

# தொழில் நீதிமன்ற வழக்குகளை பரிசீலனை செய்யக் குழு நியமனம்

கொழும்பு, மே 7

கூட்டுத்தாபன ஊழியர்களால் தொழில் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளைப் பரிசீலனைசெய்ய தொழிலமைச்சு ஒரு குழுவை நியமிக்க இருக்கிறது.

தொழில்நீதிமன்றங்கள் ஏற்கனவே வழங்கிய தீர்ப்புக்களை எதிர்த்து செய்யப்பட்ட மேன்முறையீடுகளையும் இக்குழு பரிசீலனை செய்யும்.

தொழில் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் மற்றும் மேன்முறையீடுகளை விசாரிப்பதில் இடம்பெற்றுவரும் தாமதங்களை நீக்குவதற்கு ஏதுவாக தொழில்நீதிமன்றச் சட்ட விதிகள் திருத்தப்பட்டுள்ளன.

உ

# ★ திருமண அழைப்பு ★

அன்புடையீர்:

நிகழும் பிரமோத வருஷம் சித்திரை மாதம் 26 ஆம் நாள் (09 - 05 - 90) புதன்கிழமை காலை 6. 19 மணி முதல் 7 . 55 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

| எமது கனிஷ்ட குமாரன் | எமது கனிஷ்ட குமாரத்தி |
|---|---|
| சிரஞ்ஜீவி | சௌபாக்கியவதி |
| **பிரணதார்த்திகர சர்மா** | **ஜெயகுமாரியை** |

திருமாங்கல்ய தாரணஞ் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் மணமகளில்லத்தில் நடை பெறும் விவாக சுபமுகூர்த்தத்திற்கு குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கின்றோம்,

மணமகனில்லத்தில் வரவேற்பு
10 - 5 - 90 வியாழக்கிழமை பி. ப. 4. 00 மணிமுதல் 7. 00 மணிவரை

| பிரம்மஸ்ரீ சி. சர்வேஸ்வரக் குருக்கள் தம்பதிகள் | பிரம்மஸ்ரீ கா. குகதாசசர்மா தம்பதிகள் |
|---|---|
| கந்தசாமி கோவிலடி, | கணேசவாசா, |
| மயிலணி, சுன்னாகம். | மயிலணி, சுன்னாகம். |

(இவ் அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)
(3386)

# கேள்வி விளம்பரம்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

பின்வரும் வேலைகளுக்கும் கேள்விகள் கோரப்படுகின்றன.

| வேலைகள் விபரம் | ஆகக்குறைந்தளவு நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனம் | பதிவுத்தொகை நீர்ப்பாசனத் திணைக்களம் | கட்டுப்பணம் மீளளிக்கப் படுவது | கட்டுப்பணம் மீளளிக்கப்படாதது |
|---|---|---|---|---|
| 1. நீராவிக் குளம் புனரமைப்பு | 650,000/- | 225,000/- | 250/- | 50/- |
| 2. பெரிய இத்திமடுக் குளம் புனரமைப்பு | 600,006/- | 200,000/- | 250/- | 50/- |
| 3. பெரிய இத்திமடுக்குளம் வாய்க்கால் அமைப்பு | 650,000/- | 225,000/- | 250/- | 50/- |

நிர்மாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்திலும் (ஐ சீ ரீ ரடி) நீர்ப்பாசனத் திணைக்களத்திலும் பதிவு செய்துள்ள ஒப்பந்தகாரர் மாத்திரம் 1990-05-31 தி.தி மு ப. 10.00 மணிக்கு முன்னர் விண்ணப்பிக்கலாம். கேள்விப் பத்திரங்களை கிளிநொச்சிப் பிராந்திய பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் பரந்தனில் இருந்து 1990 04-03 தொடக்கம் 1990-05-28 திகதி வரை காலை 9.00 பி.ப. 3.00 மணி வரை வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம்.

எந்திரி. பொ. சேனாதிராசா
நீர்ப்பாசன பொறியியலாளர்,
முத்துஐயன் கட்டுப் பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
ஒட்டுசுட்டான்.
1990 - 04 - 30

[சி-4500]

பட்டதாரிகளுக்கும் / அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும்
ஓர் அரிய சந்தர்ப்பம்!

# இலங்கை நிர்வாக சேவை

(S. L. A. S)

தமிழ்ப்பிரதேசங்களில் உள்ள 150 றகும் மேற்பட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்கான

## போட்டிப் பரீட்சை

1990 யூன் மாதம் 23 ஆம் திகதி நடைபெறவிருக்கும் இப் பரீட்சைக்கான

## விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்: 12- 05- 1990 மு. ப 9 மணி

பாடநெறி: 1. கிரகித்தல் 2. நுண்ணறிவுத்தேர்வு 3. பொது வினாத்தாள்/ விடய ஆய்வு

தகமைகள்:- 30 வயதிற்கு உட்பட்ட பட்டதாரிகளும் / அரசாங்க உத்தியோகத்தர்களும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 18 05- 1990

★ விரிவுரைகள் சனி ஞாயிறு தினங்களிலும் விடுமுறைநாட்களிலும்
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ கட்டணம் ரூபா 300/- (முழுப்பயிற்சிக்கும்)

விண்ணப்பப் படிவங்களையும் விபரத்திரட்டினையும் எம்மிடம் நேரில்பெற்றுக்கொள்ளலாம்

**ASTAN INSTITUTE**
[166/1 Hospital Road, Jaffna.]
(A. S சங்கரப்பிள்ளை கட்டிடம் 1ஆம் மாடி)

(சி/4395)

# 31ம் நாள் நினைவு அஞ்சலி

## அந்தியேட்டிக் கிரியை அழைப்பு



### தம்பு தம்பிராசா

அன்னையின் மடியில்: 21 - 07 - 1922
இறைவன் அடியில்: 07 - 04 - 1990

அன்பின் திருவுருவாய், பண்பின் சிகரமாய், எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய். வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து எங்கள் அனைவருக்கும் நல்வழி காட்டிய அன்புத் தெய்வமே!

நீங்கள் எங்களை விட்டு இறைவனடி சேர்ந்து இன்றுடன் ஒரு மாதமாகின்றது. என்றும் உங்களை மறவோம் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரையும் எமது இல்லத்தில் இன்று நடைபெறுங் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்,
பெறாமக்கள், மருமக்கள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், பேரப்பிள்ளைகள்.

187, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

[13106]

இலத்திரனியல் நூற்றாண்டின்
இளம் சமுதாயமே,

கணனியியல் துறையில் உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு!

Computer துறையில் முன் அனுபவம் அற்றவர்களுக்காக, திறமையும் தகுதியும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்களுடன், சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பாடத் திட்டத்துடன் யாழ்ப்பாணத்தில் சேவையாற்ற முன் வருகிறது

**ICC**

## Courses Offered

BASIC d Base III+, Lotus 123, Word Star 5.0
Word Perfect 5.0
Diploma I :- Basic/Lotus/dBase/Ws-5
Diploma II :- Lotus/d Base

★ முழுத் தொகையையும் ஆரம்பத்திலேயே செலுத்துவோருக்கு 5% கழிவு வழங்கப்படும்
★ முழுத் தொகையையும் செலுத்தும் முதல் 50 பேருக்கு 10% கழிவு வழங்கப்படும்.
★ பதிவு திகதி 09-05-90 அல்லது அதற்கு முன்பாக

மேலும்;

Computer அது தொடர்பான சாதனங்கள் தகுந்த முறையில், எமது திறமை வாய்ந்த தகுதி பெற்ற இலத்திரனியல் தொழில் நுட்பவியலாளர்களால் குறுகிய காலத்தில் Servicing திருத்தியும் கொடுக்கப்படும்.

விபரங்களுக்கு:

**ICC கிளை**

102, 3ம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

தலைமையகம்:
கொழும்பு.

[சி-4375]

## ★ COMPUTER COURSES ★

DIPLOMA IN BASIC PROGRAMMING

புதிய பிரிவுகள்
12 - 05 - 1990 (Sat & Sun Batch)
16 - 05 - 1990 (Wed & Thu Batch)
நேரம் 9 30 a. m இல் ஆரம்பமாகும்

**I. D. P. COMPUTER CENTRE**
342, K. K. S. Road, Jaffna

● Branch:- 7th MILE POST MALLAKAM
● மல்லாகம் கிளையிலும் புதிய பிரிவுகள் பி. ப. 4. 00 மணிக்கு ஆரம்பமாகும்

(சி/4369)

யாழ்ப்பாணம்
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
வரையுள்ளது

# கட்டிடத் திருத்த வேலைகளுக்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாணம், பெரியகடை இல. 127, காங்கேசன்துறை வீதியில் அமைந்திருக்கும் எமது சங்கத்தின் தலைமைக் காரியாலயக் கட்டிடத்திலுள்ள கீழ்க்காண் திருத்த வேலைகளைச் செய்து முடிப்பதற்குத் தகுதிவாய்ந்த கேள்விக்காரரிடமிருந்து கூறு விலைகள் கோரப்படுகின்றன.

1. மேசன் வேலை
2. தச்சு வேலை
3. வர்ணம் பூசுதல்
4. வாணிஸ் பூசுதல்
5. மின் இணைப்பு
6. நீர் விநியோகப் பொருத்துக்கள்

விண்ணப்பப் படிவங்களை ரூபா 25/- மீளளிக்கக் கூடிய ரூபா 50/- முற்பணமாகக் காரியாலயத்தில் செலுத்திப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

கேள்விகள் சீல் செய்து அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கேள்விக் கடிதத்தின் இடதுபக்க மேல் மூலையில் ''யாழ். ப. நோ. கூ. சங்க தலைமைக் காரியாலயக் கட்டிடத் திருத்தம் செய்வதற்கான கூறுவிலை'' என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதி 15 - 05 - 1990 நண்பகல் 12. 00 மணிக்கு முன்பதாகும்.

குறிப்பு: மேலதிக விபரங்கட்கு பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும், சங்கத்தால் வழங்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் அல்லாத ஏனையவை நிராகரிக்கப்படும்.

பொது முகாமையாளர்,

யாழ். ப. நோ. கூ. சங்கம்
259, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
04-05-1990

(சி-4387)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

வாழ்தல் உயிர்க்கன்னள் ஆயிழை சாதல்
அதற்கன்னள் நீங்கு மிடத்து.

**பொருள்:**

ஆராய்ந்த அணிகலன்களை அணிந்த இவள் கூடும் போது உயிர்க்கு வாழ்வு போன்றவள்; பிரியும் போது உயிர்க்குச் சாவு போன்றவள்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 2288

07 - 05 - 1990 த. பெ இலக்கம் 25

# வவுனியா உண்ணாவிரதம்

வவுனியா, செட்டிகுளம் குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பெண் ஒருவர் கடந்த ஒரு வாரமாக உண்ணாவிரதம்இருந்து வருகிறார் என்ற செய்தி கருத்தில் கொள்ளப்படாமல் விடக் கூடியதல்ல.

அறுபது வயதான அந்தப் பெண்மணி தமது தனிப்பட்ட கோரிக்கையை முன் வைத்தே உண்ணாவிரதம் அனுஷ்டிப்பினும், அது தமிழ் மக்கள் பலருக்குப் பொதுவானது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும்.

ஆறு வருடங்களுக்கு முன்னர், 1984 ஆம் ஆண்டில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் கைது செய்து சென்ற தமது மகனையும், மருமகனையும் விடுவிக்க வேண்டும் என்பதே அந்தப் பெண்மணியின் கோரிக்கை.

இவரின் பிள்ளைகளைப் போல இன்னும் எத்தனை ஆயிரம் தமிழ் இளைஞர்கள். குடும்பஸ்தர்கள் என்ன ஆனார்கள், எங்கே போனார்கள் என்ற நிலையில் காணாமற் போனோர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவை குறித்து இன்னும் சரியான விவரங்கள், கணக்குகள் இல்லை.

தமிழ்ப் பிரதேசங்களில் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் அனேகமாக ஒருவராவது காணாமற் போனவர்கள் பட்டியலில் சேர்ந்திருப்பார்கள் என்று சொல்லும் அளவுக்கு ஸ்ரீலங்கா இராணுவமும், இந்திய இராணுவமும் இங்கு காட்டுமிராண்டித்தனமாக, அடாவடித்தனமாக நடந்து கொண்டன.

ஆகையால் இப்போது உண்ணாவிரதம் இருக்கும் சந்தாம்பிள்ளை திரேசம்மா போன்று ஆயிரக்கணக்கான தாய்மார்கள், ஆயிரக்கணக்கான மனைவிமார், ஆயிரக் கணக்கான கணவர்கள், ஆயிரக் கணக்கில் அநாதைகளாகிவிட்ட இளசுகள், முறையே தமது பிள்ளைகளை, கணவர்களை, மனைவியரை, பெற்றோர்களை இழந்து அவர்களுக்கு என்ன நடந்ததோ என்று நாளாந்தம் தமக்குள்ளேயே ஏங்கித் தவித்து, உளம் வெதும்பி வேதனையுற்று, உயிரும் ஊனும் உருகிக் கொண்டிருப்பார்கள்! அத்தனை ஆயிரக்கணக்கான தமிழர்களினதும் மன வேக்காட்டை திருமதி திரேசம்மா பிரதிபலிக்கிறார்; பிரதிநிதித்துவப்படுத்துகிறார் என்று கொள்ள வேண்டும்.

ஸ்ரீலங்கா, இந்திய இராணுவங்கள் வன்செயல்களை அடக்கி, அமைதியைக் கொண்டு வருவதாகக் கூறி, ஈழத் தமிழ் மண்ணில் கொலை வெறியாட்டம் நடத்தியது உலகம் தெரிந்த விடயம். தங்கள் காக்கிச் சட்டைக்காரரின் காட்டுமிராண்டித் தனத்தை, மனித உரிமை மீறல்களை இரு நாட்டு அரசுகளும் மூடி மறைக்க, பூசி மெழுக முயன்றன என்பதும் எல்லோரும் அறிந்ததே.

ஆனால் உண்மைகள் உறங்குவதில்லை. என்றோ ஒரு நாள் அவை வெளிச்சத்துக்கு வரும் என்ற நியதிப்படி இரு நாட்டு இராணுவங்களும் எங்கள் மண்ணில் நடத்திய வெறியாட்டம் தொடர்ந்தும் வெளிச்சத்துக்கு வந்து கொண்டே இருக்கிறது. காலம் தனது வேலையைச் செய்து கொண்டிருக்கிறது

ஸ்ரீலங்கா, இந்திய இராணுவங்கள் தமிழ் மண்ணில் கொட்டமடித்த காலங்களில் காணாமற் போவோர் பட்டியல் நீண்டு கொண்டு போகிறது என்று சர்வதேச மன்னிப்புச் சபை கண்டித்த போதெல்லாம் இரண்டு நாட்டு அரசுகளுமே மொட்டையாக மறுதலித்து வந்தன. வவுனியா திரேசம்மாவின் உண்ணாவிரதம் அந்த மறுதலிப்புகளுக்கு ஓர் ஆப்பு. சர்வதேச மன்னிப்புச் சபையின் குற்றச்சாட்டுகளுக்கு ஒரு மாதிரி நிருபணம்!

தமிழ்த் தாய் திரேசம்மாவின் உண்ணாவிரதம், கடந்த பதினாறு வருடங்களாக காணாமற்போன ஈழத் தமிழ் மண்ணின் புதல்வர், புதல்வியர் பற்றிய விடயத்தை உலகுக்குத் திறந்து காட்டுவதாக அமையும். அவரது கோரிக்கைக்கு இலங்கை அரசு என்ன பதில் சொல்லப் போகிறது என்பதைத் தமிழர்கள் மட்டுமன்றி உலகமும் அறிந்து கொள்ள வாய்ப்பு உருவாக்கப்பட்டு உள்ளது

ஆயிரக்கணக்கான தமிழ்த் தாய்மார், தந்தையர் பிள்ளைகள் சார்பில் அவர் மன உறுதியுடன் உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கியிருப்பது வரலாற்றில் பல திருப்பங்களை விளைவுகளைத் தரும் என்பதில் ஐயமில்லை. மனித அடிப்படை உரிமை மீறலைப் புரிந்தவர்கள் அதற்குக் கணக்குக் காட்டியாவது தீர தாய் திரேசாவின் போராட்டம் வழி செய்யட்டும்.

கடந்த 16 வருடங்களாக தமிழ் மண்ணில் இராணுவங்களால கொலையுண்டோர், காணாமற் போனவர்கள் பற்றிய முழு விவரங்களையும் சேகரித்து சரியான தரவுகள் வைக்கப்பட வேண்டும் அதனைச் செய்வதற்கு இப்போதுள்ள இயல்பு நிலை பொருத்தமான வேளை சமூக நல இயக்கங்கள், தொண்டர் நிறுவனங்கள் இது விடயத்தில் உடனடிக் கவனம் செலுத்த வேண்டும்.

## சித்திரைப் பூரணைவிழா

யாழ்ப்பாணம் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின்சித்திரைப்பூரணை விழாவும் கணக்கறிக்கை சமர்ப்பண நிகழ்ச்சியும் 9 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

தேவஸ்தானத்தின் தர்ம பரிபாலன சபையின் தலைவர் பேராசிரியர் இ. குமாரவடிவேல் தலைமையில் நடைபெறும். கணக்கறிக்கை சமர்ப்பன நிகழ்ச்சியில் நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீன முதலவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும் பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்களும் ஆசியுரை நிகழ்த்துவார்கள். பலர் சிறப்புரை நிகழ்த்துவார்கள். (க)

### நிரந்தரமில்லை

முல்லைத்தீவு மாவட்டத் திணைக்களங்களில் 1981 ஆம் ஆண்டு தொடக்கம் அமைய ஊழியர்களாகப் பணிபுரிந்து வரும் பலர்இதுவரையும் நிரந்தரமாக்கப்படவில்லை.

### விடைத்தாள் பார்சல்

ஏப்ரல் மாதம் ஏழாம் திகதி நடைபெற்ற கணித அளவியல் (2 ஆம் வருடம்) பரீட்சை ஒன்றின் 15 விடைத்தாள் அடங்கிய பார்சல் ஒன்று மீசாலை புத்தூர் சந்திக்கும், கொடிகாமத்துக்குமிடையில் கண்டெடுக்கப்பட்டு கொடிகாமம் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்குப் பொறுப்பானவர்கள் ஆதாரம் காட்டி பெற்று கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (க-75)

### ஜனசக்திக்கு ஜப்பான் உதவி

ஜனசக்தித் திட்டத்திற்கு ஜப்பான் 30 கோடி யென் நிதி உதவி அளிக்கும்.

ஜப்பான்பிரதமர் கைபுவின் பேச்சாளர் இத் தகவலைத் தெரிவித்தார். (ஐ-எ)

# வடக்கு - கிழக்கு மாகாணத்தில் கால் நடைப் பண்ணைகள்

## ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் நிறுவ நடவடிக்கை

திருகோணமலை மே 6

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் ஆகக்குறைந்த ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கால் நடைப் பண்ணைகள் நிறுவப்படவுள்ளன,

இந்தப் பண்ணைகள் மாடு, ஆடு, எருமை, கோழி போன்றவற்றைக் கொண்டிருக்கும் என்று மாகாணசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

அடுத்த மூன்று ஆண்டு காலத்தில் இப் பண்ணைகள் ஒவ்வொரு நிர்வாக மாவட்டத்திலும் நிறுவப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இன விருத்திக்கான கால் நடைகள், கால்நடைகளின் உணவாகப் பயன்படும் நடுகைப் பொருட்கள் இப் பண்ணைகளில் இருந்து விநியோகிக்கப்பட உள்ளன.

## பாலர் பாடசாலை பயிற்சி சான்றிதழ் வழங்குதல் 13இல்

பாலர் பாடசாலை பயிற்சி நெறியை பூர்த்தி செய்தவர்களுக்கான, சான்றிதழ் வழங்கும் வைபவம் யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு. பொ. பாலசிங்கம் தலைமையில் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற உள்ளது.

மாநகரசபை அலுவலகத்தில் நடைபெற உள்ள இந்தவைபவத்தில் நகர விடமைப்பு பிரிவு சிரேஷ்ட முகாமையாளர் திரு. ஐ. ஏ ஹமீத். "யுனிசேவ்" திட்டமிடல் அதிகாரி ஸ்ரீ ஜெயன் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொள்வார்கள்.

யாழ். மாநகரசபை சன சமூக நிலையங்கள். மற்றும் பொதுநிறுவனங்களால் நடத்தப்படும் பாலர் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியைகளுள், பயிற்றுவிக்கப்படாத ஆசிரியைகளுக்கு. பயிற்சி அளிக்கும் நோக்குடன் "யுனிசேவ்" ஸ்தாபன நிதி மூலம் இப் பயிற்சி அளிக்கப்பட்டது. (இ 13)

### ஆலய உற்சவம்

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரசித்தமான ஆலயங்களில் ஒன்றான வன்னிவிளாங்குளம் [illegible] அம்மன் ஆலய பொங்கல் விழா ஜூன் 8 ஆம் திகதி நடைபெறும்.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய வருடாந்த உற்சவம் ஜூன் 28 ஆம் திகதி ஆரம்பமாகும்

## உள்ளூராட்சி உதவி ஆணையாளர் முல்லைத்தீவில் நியமனம்இல்லை

புதுக்குடியிருப்பு மே 7

முல்லைத்தீவு மாவட்டத்துக்கென உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஒருவர் தற்போது இல்லை.

திரு. சு. டிவகலாலா யாழ்ப்பாண மாவட்டத்துக்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமிக்கப்பட்டதை அடுத்து வெற்றிடமான மேற்படி பதவிக்கு பதில் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக திரு. யோசேப் நியமிக்கப்பட்டிருந்தார். அவரும் கடந்தமாதம் இளைப்பாறியதை அடுத்து இதுவரை எவரும் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக நியமிக்கப்படவில்லை. (இ-126)

## வாசகர் திருமுகம்

### யார் பொறுப்பாளி?

தீவுப்பகுதியில் இப்போது மூன்று பாதைகளில் மூன்று பஸ்வண்டிகளே ஓடவிடப்படுகின்றன. இவையும் ஐந்து மணித்தியாலத்துக்கு ஒரு முறையே. இந்த சேவைகள் தேவையான நேரத்துக்குக் கிடைப்பதில்லை. இந்தப் பகுதியில் ஓடும் மூன்று பஸ்களும் மிகவும் பழுதானவை. இவை எல்லாமே நாளாந்தம் பழுதாகி வழிக்குவழி நிற்கின்றன. இவற்றைத் திருத்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை.

பல சமயங்களில் இரவுத் தங்கல் சேவைக்குரிய இந்த மூன்று வண்டிகளும் ரத்துச் செய்யப்படுகின்றன. இவற்றுக்கான மாற்று ஒழுங்குகள் நடைபெறுவதில்லை. இது சாதாரண விடயமாகிவிட்டது.

ஆச்சரியம் என்னவென்றால் 3½ மைல் தூரத்திலுள்ள கொழும்புத் துறைக்கு பஸ்வண்டி போடப்பட்டுள்ளது. ஆனால் 22 மைல் தூர புங்குடுதீவுக்கோ அல்லது 20 மைல் தூரச் சுருவில் ஊர்காவற்றுறைக்கோ எதுவித போக்குவரத்து வசதியும் இல்லை.

8-5-90 இல் அன்று நண்பகலுக்குப் பின்னர் புங்குடுதீவு ஊர்காவற்றுறைப் பாதைகளுக்கு இரவு 10 மணிவரை எந்த பஸ்வண்டியும் ஓடவில்லை. இந்த நிலமைக்கு யார் பொறுப்பாளி?

**கா, ஞானசீலன்,**
பெருங்காடு,
புங்குடுதீவு.

### மின்சாரக் கேபிள் கோளாறு

அராலியூடாக வரும் மின்சாரக்கேபிள்களில் அடிக்கடி கோளாறுகள் ஏற்படுகின்றன. முன்னர் புகார் செய்யப்பட்டபோது, இந்திய அமைதிப்படை இருப்பதால் சீர் செய்வது சிக்கலாகியுள்ளது என மாநகரசபை மின்சாரப்பகுதிப் பொறியியல் பிரிவினர் கூறிவந்தனர்.

தட்டாதெரு மின்மாற்றி செயற்படும் மின்பொறியியலாளர் பிரிவில் திடீரென மின் தடை ஏற்படுவதும், மின் அழுத்தம் குறைவதும் சகஜமாகிவிட்டது. நீண்ட தாமதத்தின் பின்பே புகார்கள் கவனிக்கப்படுகின்றன. இக் குறைபாடுகள் சீர் செய்யப்படவேண்டுமென எதிர்பார்கிறோம்.

**வே. செல்வராசா,**
கொக்குவில்.

# செஞ்சிலுவைச் சங்க தினம்: யாழ்ப்பாணத்தில் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம் மே 7

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க தினம் நாளை 8 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ் கிளையும் இது தொடர்பான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்துள்ளது.

நிகழ்ச்சி விபரம் வருமாறு-

1. காலை 6.30 மணிக்கு - சைக்கிள் ஓட்டம் - ஆண்கள் சுண்டிக்குளி சங்க கட்டடத்தில் இருந்து ஆரம்பித்து பளை வரை கண்டி வீதியால் சென்று திரும்புதல்.

2. காலை - 6.45 மணிக்கு மரதன் ஓட்டம் - ஆண்கள் சுண்டிக்குளியில் ஆரம்பித்து பிரதான வீதி - 2 ஆம் குறுக்குத், தெரு, கடற்கரை வீதி, அர்ச். அந்தோனியார் கோவிலடி, புங்கங்குளம் வீதி, கண்டி வீதி வழியாக திரும்புதல்.

3. காலை - 8 மணிமுதல் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப் போட்டி - மரதன் ஓட்டம் நடக்கும் பாதை.

4. காலை - 8.00 மணி முதல் பிற்பகல் 2 00 மணி வரை - எமது சுயதொழில் வாய்ப்புத் திட்டத்தில் தயாரிக்கப்பட்ட வாழை நார்ப் பொருட்கள் பனையில் இருந்து உற்பத்திப் பொருட்கள் கண்காட்சியும், ஓவியக் கண்காட்சியும், சித்திரக் கண்காட்சியும் செஞ்சிலுவைச் சங்க பணிமனையில்.

5. காலை - 10.00 மணி முதல் 12 00 மணி வரை இரத்த தானம் - சங்கக் கட்டடத்தில் செஞ்சிலுவைச் சங்க இளைஞர், யுவதிகளினால் ஒழுங்கு செய்யப்பட்டது.

6. பிற்பகல்- 4 00 மணிக்கு (73, கண்டி வீதி, சுண்டிக்குளியிலுள்ள சங்க மண்டபத்தில்) - போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும், சுயதொழில் பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள், பரிசுகள் வழங்குதல்.

கலை நிகழ்ச்சிகள் 1. பி ப 4.30 மணி தொடக்கம் 5 30 மணிவரை நாதஸ்வர இசை கான மூர்த்தி, பஞ்சமூர்த்தி சகோதரர்கள்.

2. பி ப 5.30 மணி தொடக்கம் 6 15 மணிவரை வீணை இசை திருமதி இராஜேஸ்வரி ஜெயகானந்த குருகுழுவினர்.

3. பி.ப 6.15 மணி தொடக்கம் 7.00 மணிவரை பாட்டு திரு. பொன் சுந்தரலிங்கம்.

4. பி. ப 7. 00 மணி தொடக்கம் 7. 30 மணிவரை பரத நாட்டியம். லண்டனில் இருந்து இங்கு வந்துள்ள செல்விஅனுஷா வரதலிங்கம்.

7. 30 மணிக்கு நன்றியுரை.

# விளையாட்டால் பெறும் ஆக்கம் போராட்டத்தின் ஏணிப்படிகள்

## மயிலணி விளையாட்டு வைபவத்தில் ஆஞ்சநேயர்

மயிலணி, மே 7

"சமுதாய சீரழிவுகள் மேலோங்கிய இவ்வேளையில் சிறிதும்தளர்வுறாமல்அதனை மறுசீரமைக்கும் எமதுஇளைய சமுதாயம் விளையாட்டுப் போட்டிகளின் மூலம் மன வலிமை உடலுறுதி, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை என்பவற்றை வளர்த்துக் கொள்ள வேண்டும் இவையே விடுதலைப் போராட்டத்துக்கான ஏணிப்படிகளாக அமைகின்றன"

ஜனசக்தி சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் அதன் 24 ஆவது விளையாட்டுப் போட்டியை சுன்னாகம் மயிலணி வடக்கில் நடத்தியது.

நிலையத் தலைவர் திரு. வே. தம்பிரத்தினம் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் வலிகாமம் பிரதேச அரசியல் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும் அவர் பேசுகையில் இவ்வாறான நிலையங்கள் நலிவுற்றிருக்கும் எமது கலாசார விளையாட்டுத் துறைகளுக்குப் புத்துயிரூட்டி எழுச்சியுறச் செய்ய வேண்டும் என்றார்

பிரதம விருந்தினராகப் பங்கேற்ற வலிகாமம் தெற்கு உதவி அரச அதிபரும் விசேட ஆணையாளருமான திரு ஆ[illegible] லிங்கம் பேசுகையில் வெவ்வேறு பிரிவுகளாக நடைபெற்று வந்த இப்போட்டிகள் இம்முறை ஒருங்கிணைந்த [illegible] கட்டுக்கோப்புடன் நடைபெற்றதை பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்தார் நிலைய வளர்ச்சிக்கு தன்னாலான உதவிகளை அரசிடமிருந்து பெற்றுத் தருவதாகவும் அவர் உறுதியளித்தார்.

போட்டிகளில்முதல [illegible] வெற்றியீட்டிய பிரிவுக்கு மறைந்த போராளி [illegible] ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை விடுதலைப் புலிகளின் வலிகாமம் பொறுப்பாளர் கிளி வழங்கினார்.

விடுதலைப் புலிகள் சுன்னாகம் பிரதேசப் பொறுப்பாளர் சிவா, சுன்னாகம் கிழக்கு கிராம சேவகர் திரு. எம். இராமலிங்கம், மயிலணி சைவ மகா வித்தியாலய அதிபர் திரு. எஸ். துரைசிங்கம், யாழ். மாவட்ட எம். பி. திரு. க. செல்வநாயகம் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர். (இ-89)

# நகரை சுத்தமாக வைத்திருக்க கோரித் துண்டுப்பிரசுரம்

## குடியிருப்பாளர் வீடுகளில் விநியோகம்

யாழ்ப்பாணம், மே 7

"நகரம் நமது- கடமையும் நமது" என்ற தலைப்பிலான துண்டுப்பிரசுரங்கள் யாழ் நகர குடியிருப்பாளர்களுக்கு நேற்று விநியோகிக்கப்பட்டன.

யாழ். மாநகர ஆணையாளர் திரு வி பி. பாலசிங்கம், யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் திருபதி சு[illegible] திர்கமர் ஆகியோரால் அத்துண்டுப்பிரசுரத்தில பொறிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு

★ ஒவ்வொரு இல்லத்திலும் ஊத்தை வாளியை வைத்து சகலகழிவுப்பொருள்களையும் அதற்குள் போடுங்கள்.

★ நகர சுத்திகரிப்பு வாகனம் வரும்போது அவற்றை ஒப்படையுங்கள்.

★ இலை, குழைகள்- தடிதண்டுகளைத் தயவு தாட்சண்யமின்றி வீதிகளில் குவிக்காதீர்கள்.

★ உடைந்த பாத்திரங்கள், துருவிய தேங்காய் சிரட்டைகளை உரியமுறையில் அப்புறப்படுத்துங்கள் அல்லது வெட்டிப் புதையுங்கள்

★ "மிவுநீரைவீதிக்கு விடாது [illegible] ளவிற்குள்ளே குழி அமைத்து அதற்குள் விடுங்கள்

இந்த நகரின் வனப்புமிக்க தோற்றமும் அழகையும், ஆர்வமும் மிக்க பொது மக்களின் ஒத்துழைப்பில்தான் தங்கியுள்ளன. ஆகையினால், சுத்தத்தையும், சுகாதாரத்தையும் நிலைநாட்ட மநாகர சுகாதாரப்பகுதியுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரும் விநயமாக வேண்டப்படுகிறார்கள் இப்படிக்கோரப்பட்டுள்ளது. (இ)

## நாணய மாற்று விகிதம்

03-05-1990

இலங்கை மத்திய வங்கிக்கும் வர்த்தக வங்கிகளுக்கும் இடையிலான உடன் மாற்றுவிகிதம்:-

| | | வாங்குதல் | விற்றல் |
|---|---|---|---|
| 100 | இந்திய ரூபா | 231.01 | 231.97 |
| 100 | அமெரிக்க டொலர் | 3997.45 | 4002.50 |
| 100 | ஸ்ரேர்லிங் பவுண்ட் | 6542.20 | 6573.37 |
| 100 | ஜேர்மன் மார்க் | 2366.17 | 2384.31 |
| 100 | பிரெஞ்சு பிராங் | [illegible] | [illegible] |
| 100 | ஜப்பான் [illegible] | 25.2074 | 25.4383 |

## வட்டுக்கோட்டை செமினரி பற்றி கருத்தரங்கு

யாழ்ப்பாணம் மே 6

இந்த ஆண்டின் 3 ஆவது கருத்தரங்குத் தொடரில் "வட்டுக்கோட்டை செமினரியும் 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் மறுமலர்ச்சியும்" என்னும் பொருள்பற்றி வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் கலாநிதி எஸ் ஜெ நேசன் கட்டுரை சமர்ப்பிப்பார்.

யாழ் பல்கலைக்கழக லேன் எவினின் ரட்ணம் நிலையத்தில் எதிர் வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்த கருத்தரங்கு நடைபெறும். (இ)

# செய்திக்கொத்து

### சிரமதானம்

கொடிகாமம் மே 7

தென்மராட்சி கிழக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் வரணி ஆஸ்பத்திரி வளவை சிரமதானம் மூலம் சுத்தம் செய்துள்ளார்கள் (க-75)

### இத்தாவிலுக்கு நாளை மின்சாரம்

பச்சிலைப் பள்ளி மே 7

இத்தாவில் கிராமத்துக்கு நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் மின்சாரம் விநியோகிக்கப்படும்

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திரு கே. மாணிக்கவாசகர் விநியோகத்தை ஆரம்பித்து வைப்பார். பளை உதவி அரச அதிபர் திரு. சுந்தரசாமி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பச்சிலைப் பள்ளி அரசியல் பொறுப்பாளர் செல்வராசா ஆகியோரும் இந்த ஆரம்ப வைபவத்தில் கலந்து கொள்வார்கள் (ப 177)

### புதிய தரிப்பிடம்

பச்சிலைப்பள்ளி, மே 7

சாவகச்சேரி பஸ் நிலையத்தைத் தரிப்பிடமாகப் பயன்படுத்தி வந்த மினிபஸ்கள் நாளை திங்கட்கிழமை முதல் சாவகச்சேரி நீதி மன்ற வளவில் நிறுத்தப்படவுள்ளன.

இதற்காக இவ்வளவைத் துப்பரவு செய்யும் பணி சிரமதானம் மூலம் இன்று மேற்கொள்ளப்படுகிறது. (ப-117)

### பழைய மாணவர் உதவி

குருநகர் மே 7

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்துக்கு 5000ரூபா பெறுமதியான நீர்இறைக்கும் இயந்திரம் ஒன்றை பழைய மாணவரான திரு எஸ். ஸ்ரீஸ்கந்தராசா என்பவர் அண்மையில் அன்பளிப்புச் செய்தார் என அதிபர் திரு. க. கனகசிங்கம் தெரிவித்தார், (ப-51)

### மரத்தால் விழுந்து காயம்

குருநகர் மே 7

கள்ளுச் சேகரிக்க மரத்தில் ஏறியவர் தவறி விழுந்து பலத்த காயங்களுக்கு உள்ளானார்.

ஆறுகால்மடம் புதுவீதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளாகி யாழ். அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பவர் ஆறுகால்மடம் பாடசாலை ஒழுங்கையைச் சேர்ந்த பரமு கணபதிலிங்கம் (வயது 38) என்று தெரிவிக்கப்படுகிறது.

### நீர்வேலியில் கலைநிகழ்ச்சி

மயிலணி மே 7

புத்தூரில் அமைக்கப்படவிருக்கும் மாவீரர் சட்டட நிதிக்காக இம்மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 700 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியினரின் கலை கலாசாரப் பிரிவின் "களத்தில் காத்தான்" நாடகமும், "நல்லதையே செய்வோம்" வில்லிசையும், "நல்லதம்பி" நாடகமும், இராஜன் இசைக்குழுவினரின் புரட்சி கானங்களும் இடம்பெறும். (இ-89)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடி

# வேலை வாய்ப்புகள்

## (SAUDI ARABIA)

சவூதி அரேபியா

பின்வரும் வெற்றிடங்களுக்கு சவூதி அரேபியா விற்கு ஒரு கிழமையில் பிரயாணம் செய்வதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரும்புவோர் உடன் PASSPORT, 3 படங்கள், அனுபவச் சான்றிதழ்கள் என்பனவற்றுடன் நேரில் வரவும். பிரயாணம் 11 - 05 - 1990 (8ஆம் திகதிக்கு முன் நேரில் வரவும்)

வயது 25 க்கு மேல்

★ Heavy Driver (கனரக வாகனச் சாரதி) — 800 SR
★ Plumber (பொருத்துனர்) — 700 SR
★ Diesel Mechanic (டீசல் மெக்கானிக்) — 800 SR
★ Heavy Equipment Operator (கனரக வாகன இயக்குனர்) Crane. Bulldozer Showel கிரெயின், புல்டோசெர், சவல் — 800 SR
★ Works shop Technician (ரியூப் ஒட்டுவதிலும், ரயர், ரியூப் மாற்றுவதிலும் அனுபவமுள்ளவர் — 500 SR
★ Petrol Mechanic (பெற்றோல் மெக்கானிக்) —
★ Welder (வெல்டர்) — 700 SR
★ Black Smith கொல்லர் — 700 SR
★ Mason (மேசன்) — 700 SR
★ Technical Supervisor — 1000 SR
எந்தரவியல் மேற்பார்வையாளர்
[Project Construction in Industrial and Agriculture project. Also Should Speak Fluent English and A Knowledge to Run the Business]

சகலருக்கும் இலவச, உணவும் இருப்பிட வசதியும் உண்டு.

எமது காரியாலயம் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் திறந்திருக்கும்)

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**No. 156, 1ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.**

(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)

[சி-4389]



# வெற்றுச்சாக்கு விற்பனை

**வலி. கிழக்கு வடபகுதி பல நோ. கூ. சங்கம் அச்சுவேலி.**

எமது சங்கத்தில் 3000 (மூவாயிரம்) வெற்றுச் சாக்குகள் தரம் பிரிக்கப்பட்டு கேள்வி விண்ணப்ப மூலம் விற்பனைக்கு இருக்கிறது. விண்ணப்பிக்க விரும்புவோர் ரூபா 5/-கட்டி, விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று மீளத்தக்க வைப்புப் பணமாக ரூபா 250/-கட்டி விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்களை 11-05-90க்குப் பிந்தாமல், ''தலைவர், வலி. கிழக்கு வடபகுதி பல. நோ. கூ. சங்கம், இராசவீதி, அச்சுவேலி, என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கவேண்டும். என்வலப்பின் இடதுபக்க மேலமூலையில், வெற்றுச்சாக்கு கேள்விவிலை'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

இங்ஙனம்:
கூட்டுறவுச்சேவையிலுள்ள
பொது முகாமையாளர்

வலி கிழக்கு (வ. ப) ப. நோ.
கூட்டுறவுச்சங்கம்.
''தலைமைப் பணிமனை''
இராசா வீதி, அச்சுவேலி.

[சி-4385]


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
1914 - 12 -07

மறைவு:
1989 - 04 - 18

சின்னத்தம்பி தம்பிராசா
[ஓய்வு பெற்ற சுகாதாரப் பரிசோதகர் பருத்தித்துறை]

ஈசன் எந்தை இணையடி நிழலில்
இருக்க வேண்டி இறைஞ்சுகின்றோம்

'விவேகானந்தம்'
முத்தட்டு மட ஒழுங்கை,
கோண்டாவில் [மேற்கு]

பிள்ளைகள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

( C/ 4381 )

★ ஐக்கிய ஜேர்மனி உருவாகும்போது

# நேட்டோ இராணுவ அமைப்பில் சோவியத் யூனியனும் சேருமா?

### பொன் செய்தியாளர் மாநாட்டில் கேள்வியும் பதிலும்

பொன் மே 6

ஐக்கிய ஜேர்மனியை உருவாக்குவது பற்றிய முதற் கட்ட பேச்சுக்கள் மேற்கு ஜேர்மன் தலைநகர் பொன்னில் கடந்த சனிக்கிழமை நடந்தன.

பேச்சுக்கள் திருப்திகரமாக அமைந்தன என்று அறிவிக்கப் பட்டது.

கிழக்கு ஜேர்மனி, மேற்கு ஜேர்மனி, பிரிட்டன், சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரான்ஸ், ஆகிய நாடுகளின் வெளியுறவு அமைச்சர்கள் இப் பேச்சுக்களில் கலந்து கொண்டனர்.

ஐக்கிய ஜேர்மனியை உருவாக்கும் நடவடிக்கைகளை துரிதமாக்குவது என்று பேச்சுக்களில் கலந்து கொண்ட அனைத்து நாடுகளும் இணக்கம் கண்டன.

இரண்டாம் கட்டப் பேச்சுக்களை கிழக்கு ஜேர்மன் தலைநகரில் எதிர் வரும் ஜூன் மாதத்திலும் -

மூன்றாம் கட்டப் பேச்சுக்களை பிரான்ஸ் தலை நகர் பாரிஸில் எதிர் வரும் ஜூலை மாதத்திலும் -

நான்காம் கட்டப் பேச்சுக்களை சோவியத் தலைநகர் மாஸ்கோவில் எதிர் வரும் செப்டெம்பரிலும் நடத்துவது என்று நேற்றையமாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது.

சனியன்று நடந்த பேச்சுக்களின் போது, சோவியத் யூனியன் தனது நிபந்தனைகள் இரண்டை விட்டுக் கொடுத்ததாகத் தெரிய வருகிறது.

புதிதாக உருவாகும் ஐக்கிய ஜேர்மனி நடுநிலை நாடாக இருக்க வேண்டும்; ஐக்கிய ஜேர்மனியை உருவாக்கும் பேச்சுக்களில் இரண்டாம் உலக மகா யுத்தத்தில் ஈடுபட்ட 56 நாடுகளும் பங்கு பற்ற வேண்டும் — ஆகிய நிபந்தனைகளையே சோவியத் யூனியன் விட்டுக் கொடுத்தது.

★ தற்போது உள்ள கிழக்கு ஜேர்மனியின் எல்லைகளும் மேற்கு ஜேர்மனியின் எல்லைகளுமே, ஐக்கிய ஜேர்மனியின் எல்லைகளாக அமையும்.

★ போலந்துடனான எல்லைகளை நிர்ணயித்துக்கொள்ளும் உடன் படிக்கையை ஐக்கிய ஜேர்மனியே போலந்துடன் செய்து கொள்ளும்.

முன்கண்ட இணக்கங்களும் சனி மாநாட்டில் காணப்பட்டன.

மாநாட்டு முடிவில் ஆறு வெளியுறவு அமைச்சர்களும் கூட்டாக செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

ஐரோப்பாக் கண்டத்தில் இதுகாலவரை இடம் பெற்று வந்த 'பனிப்போர்' முடிவடைந்து விட்டது என்று சோவியத்வெளியுறவு அமைச்சர் எட்வர்ட் ஷெவர்நாட்சே தெரிவித்தார்.

புதிய ஐரோப்பா கண்டத்தில் ஐக்கிய ஜேர்மனி ஒரு வல்லரசாக அமையலாம் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர் சொன்னார்.

அமெரிக்க அதரவு நாடுகள் உள்ள நேட்டோ இராணுவ அமைப்பில் ஐக்கிய ஜேர்மனி உறுப்பு நாடாக இருக்கக் கூடாது என்ற சோவியத்தின் எதிர்ப்பு குறித்து இணக்கம் காணப் படலாம் என்று சோவியத் யூனியன் வெளியுறவு அமைச்சர் சொன்னபோது, ஒரு செய்தியாளர், ''நேட்டோ இராணுவக் கூட்டில் சோவியத் யூனியனும் சேருவதன் மூலம்இதுசாத்தியமாகுமா?', - என்று கேட்டார்.

''அந்த சூழ்நிலை இன்னும் உருவாகவில்லை'' என்று சோவியத் அமைச்சர் பதிலளித்தார்.

நேட்டோவில் சேர சோவியத் யூனியன் விண்ணப்பிக்கவில்லை என்று அமெரிக்க அமைச்சர் சொன்னார். (எ)

## தேவிலால் ஆஸ்பத்திரியில்

புதுடில்லி, மே 6

இந்தியாவின் துணைப் பிரதமர் தேவிலால் சுகவீனம் காரணமாக வெள்ளிபுதுடில்லிராம் மனோகர் லோகியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். (உ-எ)

## தற்கொலை முயற்சி

மறைந்தமுன்னாள் முதலமைச்சர் எம்ஜிஆரின் சகோதரர் சக்கரபாணியின்மகள் லீலாவதி மீது சென்னைப் பொலீஸார் தற்கொலை முயற்சி வழக்குப் பதிவுசெய்துள்ளனர்.

அளவுக்கு மீறி தூக்கமாத்திரை சாப்பிட்டதைத் தொடந்து, மயங்கிய நிலையில் அவர் சென்னை, ராஸ் பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பேச முடியாத நிலையில் அவர் இருபபதாகச் சொல்லப் படுகிறது.

லீலாவதி தான் சனதுசிறுநீரகங்களில் ஒன்றை எம்ஜியாருக்கு தானம் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## ஜனதாதள் தலைவர் தெரிவு மே 20 இல்

இந்தியாவின் ஆளும் ஜனதாதள் கட்சியின இடைக்காலத் தலைவர் தெரிவு இம்மாதம் 20 ஆம் திகதி நடைபெறும் என்று புதுடில்லியில் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாதம்முதலாம் திகதி இத்தெரிவை நடத்துவது என்று முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

நாட்டில் உள்ள ஜனதாதள் எம்பிக்கள், எம். எல். ஏக்கள் மற்றும் எம் எல். சிக்கள் புதிய இடைக்காலத்தலைவரைத் தெரிவு செய்வர். (எ)

## பெண்ணின் வயிற்றில் 30 கிலோ கட்டி

நியூயேர்க், மே 6

அமெரிக்கா புளோரிடா மாநிலத்தில் 47 வயது பெண்ணின் வயிற்றில் இருந்து 30 கிலோ கொண்டகட்டி ஒன்றை சத்திர சிகிச்சை மூலம் டாக்டர்கள் அகற்றினர்

ஜக்சோன் வில் லே மருத்துவ மனையில் இந்த அறுவைச் சிகிச்சை இடம் பெற்றது.

இருதயவியாதிக்காக இப்பெண் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (ஒ-எ)

## ஐந்தாம் ஆண்டு நினைவுதினம்



அமரர்
**திருமதி. உருக்குமணி இராசரத்தினம்**
(இளைப்பாறிய ஆசிரியை, வேலணை)

மலர்வு;
15 - 05 - 1914

நிறைவு:
02 - 05 - 1985

திதி:-07 - 05 - 1990

**விருத்தம்**

வீட்டிலே உருக்குமணி வெகுநாளில்லை
விபரங்க ளெல்லாமே தொகுத்துக் கூறக்
கூட்டிவர வேணும்போ லிருக்கு தென்று
குலையாத பற்றுடைய கணவன் கூறக்
கேட்டுமே மக்கள் மருமக்கள் பேரர்
கேண்மையோ ரெல்லாரு மொன்று கூடிப்
போட்டியாய் அஞ்சலிகள் செலுத்தத் தானே
பொருந்திவரு மாண்டைந்தின் புனித நாளே

வைத்தியர், V. S. இராசரத்தினம் J. P
மருமக்கள், பேரர்.

மலரகம்,
வேலணை-2


(13027)


குமுலுஸ் D.F. போட்டி

# BASF
# குமுலுஸ் D.F.

**பாவித்து மிளகாய் செய்கையில் அதிக விளைவு பெறுவதோடு பரிசுகளையும் பெறுங்கள்**

| | |
|---|---|
| நப்சாக் தெளி கருவி — | 5 |
| ஸ்போட்ஸ் துவிச்சக்கர வண்டி — | 5 |
| கைத்தெளி கருவி — | 5 |
| சிறிய வானொலிப்பெட்டி — | 20 |
| எவரெடி ரோச் லைற் — | 48 |
| ரீ சேட் — | 100 |




மிகவும் இலகுவாக இந்த போட்டியில் பங்குபற்றலாம். நீங்கள் செய்ய வேண்டியது.

1. கீழேயுள்ள கூப்பனை அல்லது குமுலுஸ் DF பைக்கற்றுகளிலுள்ள கூப்பனை நிரப்பி, குமுலுஸ் பைக்கற்றுகளின் மேல்பகுதியை வெட்டி ஒவ்வொரு கூப்பனுடனும் 5 குமுலுஸ் மேல்பகுதிகளை சேர்த்து, பின்லே கெமிக்கல்ஸ் அன் டைஸ் (பிரைவேட்) லிமிட்டெட், 186 வக்சோல் வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். ஒருவர் பலமுறை அனுப்பலாம்.
2. தபாலுறையின் இடதுபக்க மேல்பகுதியில் ''குமுலுஸ் DF போட்டி'' என எழுதவும்.
3. போட்டியின் முடிவு திகதி 30-06-1990
4. போட்டியின் அதிஸ்டசாலிகளின் பெயர்கள் பத்திரிகை மூலமும் கடிதம் மூலமும் அறிவிக்கப்படும்.
5. பின்லே கெமிக்கல்ஸ் ஊழியர்களும், பேர்ஸ்ற் அன் போவேட் லிமிட்டெட் ஊழியர்களும் இந்த போட்டியில் பங்குபற்றமுடியாது.




பெயர் ______
முகவரி ______
______
வியாபாரியின் பெயர் ______
______
முகவரி ______
______

FINCHEM AGRO DIVISION
பின்லெ கெமிக்கள்ஸ் அன் டையிஸ் (பிரைவெட்) லிமிட்டெட்
(விவசாய இரசாயன பகுதி)
186. வக்சோல் வீதி, கொழும்பு 2.

Licence No S/731

பீடை நாசினிகள் அபாயகரமானவை. அவதானமாக பாவிக்கவும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் மு. நாகேந்திரம்

(அதிபர் நாகேஸ்வரி வித்தியாசாலை, சுன்னாகம்)

தோற்றம்: 14-01-1936 மறைவு: 07-04-1990

திதி: 07-05-1990

அமரரின் ஈமக்கிரியையின் போதும், அந்தியேட்டி கிரியையின் போதும் வருகை தந்த உற்றார், உறவினர், நண்பர்கள், மாணவர்கள் அனைவருக்கும் நன்றியை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அஞ்சலி செலுத்துபவர்கள்.

மனைவி, மக்கள், மாமி,
சகோதர சகோதரிகள், மைத்துனர்கள்,
பெறாமக்கள், மருமக்கள்.

புகையிரத நிலைய வீதி,
சுன்னாகம். (3517)

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



### நாகலிங்கம் விநாயகமூர்த்தி

(விவசாய உத்தியோகஸ்தர்) (A. O)

அன்னை மடியில்: 02 – 11 – 1948 ஆண்டவன் அடியில்: 29 – 04 – 1988

ஈராண்டு சென்றதையா
எமதில்லம் இருண்டதையா
உமை நினைத்த போதினிலே
எமதுள்ளம் துடிக்குதையா
வேதங்கள் கூட எங்கள் வேதனையைத் தீர்க்கவில்லை
ஆறாத்துயரில் எம்மை ஆழ்த்தி விட்டு – நீங்கள்
மீளாத்துயில் கொள்ளச் சென்றதெங்கே
மனையாளும் பிள்ளைகளும்
சிந்தை கலங்கி நிற்கின்றோம்
இத்தரணியில் வாழ்ந்தது போது மென்றா
உங்கள் தந்தையுடன்
ஆறாம் மாதம் சென்று விட்டீர்கள்

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றென்றும்
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
சாந்தி! சாந்தி!!

நினைவால் துயருறும்:
மனைவி, மக்கள், தாய்,
சகோதரங்கள், மாமன், மாமி,
மைத்துனர்மார்கள்.

இல. 65, புது அத்தியடி வீதி,
யாழ்ப்பாணம். [13109]

## மினிபஸ் வாங்குவதற்கு வங்கிக் கடன் கிடைக்கும்

யாழ்ப்பாணம், மே. 7

முப்பது பயணிகளுக்கு மேல் பயணம் செய்யக்கூடிய புதிய மினிபஸ்களை கொள்வனவு செய்வதற்கு இலங்கை வங்கி கடன் வழங்கவிருக்கிறது.

பஸ் பெறுமதியின் 75 வீதத்தை வங்கி வழங்கும். மீதி 25 வீதமான பணத்தை கொள்வனவு செய்பவர் செலுத்தி வாடகைக் கொள்வனவு அடிப்படையில் பஸ்ஸைப் பெற்றுக்கொள்ளலாம் இந்த வாடகைக் கொள்வனவைச் செய்வதற்கு பிணையாளர்களின் பிணைமுறியும் சமர்பிக்கவேண்டும்.

இதே போன்ற திட்டத்தை மக்கள் வங்கியும்நடைமுறைப் படுத்துகிறது. (உ-3)

## கோதுமை மா பாவனை அதிகரிப்பு

கொழும்பு, மே 7

நாட்டில் கோதுமை மா பாவனை அதிகரித்து இருப்பதாக ஆய்வு ஒன்றில் தெரிய வந்துள்ளது.

மாதம் 5 ஆயிரம் மெட்ரிக் தொன்னுக்கும் அதிகமாக கோதுமை மா பாவிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

## மோதிக் கொண்டதால் வந்தது எய்ட்ஸ்!

உதைபந்தாட்டப் போட்டி ஒன்றில் இரண்டு வீரர்கள் ஆளுக்கு ஆள் மோதிக் கொண்டார்கள்.

அதனால் இரண்டு வீரர்களுக்கும் இரத்தக்காயம் ஏற்பட்டது.

பின்னர் ஒருவருக்கு எய்ட்ஸ் நோய் கண்டது.

மருத்துவ விசாரணையின் போது மற்ற வீரரின் உடலில் எய்ட்ஸ் கிருமிகள் இருப்பது தெரியவந்தது.

இந்த விவரங்கள் பிரிட்டனில் இருந்து வெளிவரும் 'லான்செட்' (Lancet) என்ற வைத்திய சஞ்சிகையில் வெளியாகின.

இத்தாலியில் உள்ள டாக்டர்கள் குழு இவ்விவரங்களை வெளியிட்டது.

## பஸநாயக்கா நிலமேக்களுக்கு இனி அரச பதவிகள் இல்லை!

கொழும்பு, மே 7

பஸநாயக்க நிலமேக்களாக பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற, மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் நாடாளு மன்ற உறுப்பினர்கள், அப்பதவிகளை ராஜினாமாச் செய்து விடவேண்டும் என்று ஐ தே. க. செயற்குழு கேட்டுள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாத இறுதிக்குள் அவர்கள் ராஜினாமாக்களை சமர்ப்பித்து விட வேண்டும்.

தேர்தலில் தெரிவு செய்யப்பட்ட எவரும் பஸநாயக்க நிலமே பதவிகளை வகிக்கக் கூடாது என்பதே இத்தீர்மானத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

## வேட்பாளர்களை தெரிய தேர்தல்

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும்வேட்பாளர்களைத் தெரிவு செய் செய்வதற்காக கட்சி மட்டத்தில் பூர்வாங்கத் தேர்தல்களை நடத்த ஐக்கிய தேசியக் கட்சிமுடிவு செய்துள்ளது. ஐ தே. க. செயற்குழு கடந்த வெள்ளிக்கிழமை இத்தீர்மானத்தை எடுத்தது.

உறுப்பினர்களைச்சேர்க்கும் இயக்கம் ஒன்றையும் கட்சி ஆரம்பிக்க உள்ளது என்று அமைச்சரும் கட்சிப் பொதுச் செயலாளருமான திரு. ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார். (ஒ-எ)

## தொண்டர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்.

★ நியமனத்திற்கு சேவைக் காலம் போதாது இருந்தால் குறிப்பிட்ட காலம் சேவை ஆற்றியபின்பு அவர்கள் நிரந்தரமாக்கப்படவேண்டும்.

★ நிரந்தர ஆசிரியரின் வரவை அடுத்து பதவி இழந்த தொண்டர் ஆசிரியர்கள் மீள சேவைக்கு அமர்த்தப்பட வேண்டும்.

★ அவர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும்.

★ மேற்குறிப்பிட்டபடி தற்போது கடமையாற்றும், மற்றும் பதவி இழந்த அனைத்து தொண்டர் ஆசிரியர்களின் பெயர், விவரங்களைச் சேகரித்து கல்வி அமைச்சுக்கு வழங்குதல்.

இவையே நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள் ஆகும்.

சம்பந்தப்பட்டவர்கள் தமது பெயர்களைவே,யா. கிருபாகரன், 68 புதுச்செம்மணி வீதி, நல்லூர் வடக்கு,யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பதியும்படி கேட்கப்பட்டுள்ளனர்.

சங்கக்கூட்டம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மீண்டும் நடைபெறும் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-9)

## சுயவேலை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொழில் ஆரம்பிக்க கடன் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த திட்டத்துக்கான நிதி வந்து சேர்ந்துள்ளதாகவும், அடுத்த ஓரிரு வாரங்களில் இந்தத் திட்டம் செயல்படுத்தப் படும். 'என்றும் தெரிவிக்கப் பட்டது. (உ-3)

## நிவாரண---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்பான உயர் அதிகாரிகளும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

தற்சமயம் அமுல் செய்யப் பட்டு வரும் நிவாரண, புனரமைப்பு வேலைகளின் முன்னேற்றம், நிதி வழங்கல், வேலைகளில் உள்ள தடைகளுக்கு நிவர்த்தி காணும் வழிமுறைகள் ஆகிய விடயங்கள் முக்கியமாக ஆராயப்பட்டன.

விரைவுபடுத்தும் வழிமுறைகளுக்கு நிர்வாக மட்டத்தில் மேற்கொள்ள வேண்டிய மாற்றங்கள் குறித்தும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன. [ஒ-3]

## நிர்வாக---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யான விசேட வர்த்தமானி மூலம் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இம் மாதம் 14 ஆம் திகதிக்கு முன்பாக விண்ணப்பங்களை அனுப்புமாறு கேட்கப் பட்டுள்ளது.

இதே நேரம் மேற்படி வர்த்தமானி யாழ்ப்பாணத்துக்கு இதுவரை வந்து சேரவில்லை. இதனால் இதுபற்றிய விவரங்களை இப்பகுதி மக்கள் அறிய முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)


விலங்கியல்
R. ஈஸ்வரதாசன்
B.Sc (Cey)
✶ மீன்வளர்ப்பு —
ஆரம்பம்:- 7-5-90
திங்கள் 4.30 P.m
REVISION & PAPER
திங்கள் 5 30 P.m
✶ [உணவு கால்வாய்த் தொகுதி]
21, மணல்தறை லேன்,
கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.
91 ஆம் ஆண்டுக்குரிய புதியபிரிவு
ஆரம்பம்:- 9 5-90
புதன் 3.30 P.m
[முழு பாடத்திட்டமும் முடிக்கப்படும்]


## 150பேர்விடுதலை

கொழும்பு, மே 06

வெசாக் நாளை ஒட்டி சிறைக்கைதிகளுக்கு மீண்டும் மன்னிப்பு வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

சுமார் நூற்றிஐம்பது கைதிகள் விடுதலை செய்யப் படவுள்ளனர்.

ரமழான் பெருநாளை ஒட்டி 300க்கு அதிகமான கைதிகளுக்கு அரசு மன்னிப்பு அளித்துஅவர்களை விடுதலை செய்தது தெரிந்ததே. (இ-எ)

## தமிழ் நாட்டுக்கு-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனவும் மீனவரை கடலுக்குச் செல்லவேண்டாம் எனவும் தமிழ்நாடு அரசு எச்சரித்துள்ளது. (இ-ப)

## நடுகாட்டில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தது.

ஹெலிக்கொப்டர் ஹபரணையிலிருந்து சிகிரியா நோக்கி ஆறுமைல் தொலைவில் காட்டிற்குள் விழுந்தது. அதில் பயணம் செய்த ஆறு விமானப்படை அதிகாரிகளும் மரணமானார்கள்.

அருணா பீரிஸ் (விமான மோட்டி), லெப். உணங்கமுவ, பாசன் டி மெல், சிறிகுலதுங்கா, சமரவீரா, ரெகி ஆகியோரே பலியான விமானப்படை அதிகாரிகள் ஆவர்.

ஹெலிக்கொப்டர் விழுந்ததற்கான சரியான காரணம் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. (அ-உ]

## சந்தை விலைகள்

சுன்னாகம், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் சந்தைகளில் நேற்றைய மரக்கறி விலைகள் — கிலோ அடிப்படையில்;

| | சுன்னாகம்: | திருநெல்வேலி: | யாழ்ப்பாணம்: |
|---|---|---|---|
| கத்தரி | ரூ. 12 00-15.00 | ரூ. 15.00-18.00 | ரூ. 20.00-24.00 |
| வாழைக்காய் | ரூ. 8.00-10 00 | ரூ. 3.00- 6.00 | ரூ. 10.00-12.00 |
| பயிற்றங்காய் | ரூ. 14 00-16.00 | ரூ. 15.00-17.00 | ரூ. 18.00-20.00 |
| பாகற்காய் | ரூ. 12.00-14.00 | ரூ. 13.00-15 00 | ரூ. 12.00-14.00 |
| கோவா | ரூ. 10.00-12.00 | ரூ. 10.00-13 00 | ரூ. 14.00-16.00 |
| லீக்ஸ் | ரூ. 20.00-22 00 | ரூ. 20.00-23.00 | ரூ. 20.00-24.00 |
| கரட் (மலைநாடு) | ரூ. 20.00-22 00 | ரூ. 20.00-23.00 | ரூ. 26.00-28 00 |
| பீற்றூட் | ரூ. 6 00- 8.00 | ரூ. 7.00-10.00 | ரூ. 16.00-18.00 |
| பீன்ஸ் | ரூ. — | ரூ. 19.00-22.00 | ரூ. 22.00-24.00 |
| பூசணி | ரூ. 3.50- 4 50 | ரூ. 3.00- 4 00 | ரூ. 4.00- 6.00 |
| பச்சைமிளகாய் | ரூ. 14.00-16.00 | ரூ. 12.00-14.00 | ரூ. 22.00-24.00 |
| வெங் (வேதாளம்) | ரூ. 26.00-30.00 | ரூ. 20.00-36.00 | ரூ. 40.00-42.00 |
| வெங்காயம் (சிறிய) | ரூ. 24.00-26 00 | ரூ. 18.00-26.00 | ரூ. 34.00-36.00 |
| உருளைக்கிழங்கு | ரூ. 28.00-30.00 | ரூ. 29.00-30.00 | ரூ. 29.00-30.00 |
| மரவள்ளிக்கிழங்கு | ரூ. 6.30- 7.30 | ரூ. 5 00- 6.50 | ரூ. 6.00- 8.00 |
| வெண்டைக்காய் | ரூ: 18.00-17.00 | ரூ: 12.00-16.00 | ரூ. 18.00-20.00 |

## ஜெயலலிதாவுக்கு முழங்காலில் வலி

ஜெயலலிதாவுக்கு முழங்காலில் வலி உள்ளது.

நிற்கவோ, நடக்கவோ அவரால் முடியவில்லை.

அதிமுக முன்னணித் தலைவர்களில் ஒருவரும்முன்னாள் அமைச்சருமான திரு. நெடுஞ்செழியன் முன்கண்டவாறு தெரிவித்தார்.

சென்னையில் ஜெயலலிதா கிகிச்சை பெற்று வருகிறார் என்றும் நெடுஞ்செழியன் தெரிவித்தார். (இ-எ)


கட்டைவேலி- நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்
பதவி வெற்றிடம்
பதவி;- தற்காலிக கிளை முகாமையாளர் - 208 16 (ஆண்கள் மட்டும்)
சம்பளம்:- 700 – 15x10 – 20-x5 – 950 ம் ஏனைய படிகளும்.
விண்ணப்பமுடிவுதிகதி:- 14 – 05 – 1990
மேலதிக விபரங்களைச் சங்கக் காரியாலயத்திலும் கிளைகளிலும் பார்வையிடலாம்.
பொதுமுகாமையாளர்.
கரவெட்டி.
05 – 05 – 90 . (4393)



விவசாயத் திணைக்களம் (வடக்கு-கிழக்கு)
விவசாயக் கல்லூரி, வவுனியா.
விவசாய டிப்ளோமா பயிற்சி [1990/92] நெறிக்கான விண்ணப்பம்
1990/92 கல்வியாண்டிற்கான இருவருட விவசாய டிப்ளோமா பயிற்சி நெறிக்கு தகைமையுடைய விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
01 அனுமதி பெறுவதற்கான தகைமைகள்:
1. க.பொ.த (உ த) பரீட்சையில் பின்வரும் ஆறு பாடங்களில் ஏதாவது மூன்று பாடங்களில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் தாவரவியல், விலங்கியல், இரசாயனவியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம், புவியியல்.
2. 1990ம் ஆண்டு புரட்டாதி 1ஆம் திகதி 18 25 வயதிற்கு இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பப்படிவங்களை அதிபர், விவசாயக் கல்லூரி, வவுனியா இடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.
03. பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்ப படிவங்கள் பதிவுத்தபாலில் 25-06-90 அல்லது அதற்கு முன் பாகவிவசாயப் பணிப்பாளர் (வடக்கு-கிழக்கு) 42, கஸ்கிசன் வீதி, திருகோணமலைக்கு அனுப்பப்பட வேண்டும்
விவசாயப் பணிப்பாளர் (வடக்கு- கிழக்கு)
விவசாயத் திணைக்களம்,
42, கஸ்கிசன் வீதி,
திருகோணமலை.
[சி-4394]


## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் திதியும்



### அமரர் டாக்டர் ந. விஜஜேந்திரன் ஜே. பி.

(அகில இலங்கை சமாதான நீதிபதி)
வைத்திய கலாநிதி - ஆயுர்வேத வைத்தியசாலை-
அரசினர் வைத்தியசாலை கைதடி

அன்னையின் மடியில்: 02-07-1944 உதிர்வு: 18--04-1989

திதி: 07-05 1990

சென்ற ஆண்டுதனில் காலனவன்
சொல்லாமல் வந்து வாழும் வயதுதனில்
உன் உயிரைக் கவர்ந்ததனால்
ஓராண்டு சென்றும் ஆறாத மனதினராய்
இன்று மறைந்தது போல் உனை என்றும்
எண்ணி எண்ணி தம்நிலை மறந்து
கதறிடும் உன் குடும்பத்திற்கும்
ஒப்பற்ற ஒருவனை ஊரவரின் தோழனை
மற்றோரின் துயர்தீர்க்கும் அன்பனை
என்று இனிக்காண்போம் நாம் என
தினம் மாயும் நண்பர்க்கும்
கடவுளும் காலமும் என்றுதான் விடைதருமா.

அன்னாரின் பிரிவால் துயருறும்,
மனைவி: விமலா விஜஜேந்திரன்
பிள்ளைகள்: ஜனகன், ஜயந்தன், ஜெனனி,
சகோதரி, மாமன், மாமி, மைத்துனர்கள்.

"சிவஸ்தான்"
நல்லூர், யாழ்ப்பாணம். (13037)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# உதயன்




07 - 05 - 1990 திங்கட்கிழமை

## கிளிநொச்சி மாவட்டம்: இன்று முதல்
## 11 பாடசாலைகளில் 2 நேர வகுப்பு

கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி மாவட்டத்தில் முதன் முதலாக இருநேரம் பாடசாலைத் திட்டம் 11 பாடசாலைகளில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயம், புனித திரேசா மகளிர் கல்லூரி, கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம், பரந்தன் இந்து மகா வித்தியாலயம், முரசுமோட்டை முருகானந்தா மகா வித்தியாலயம், பளை மகா வித்தியாலயம், பூனகரி மகா வித்தியாலயம், முழங்காவில் மகா வித்தியாலயம், அக்கராயன் மகா வித்தியாலயம், வட்டக்கச்சி மகா வித்தியாலயம், தர்மபுரம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகள் இன்று முதல் இத்திட்டப்படி இருநேரமாக இயங்கு உள்ளன.

இத்திட்டம் வெற்றிகரமாக அமையுமெமின் மாவட்டத்தின் ஏனைய பாடசாலைகளுக்கும் இது விரிவுபடுத்தப்படும் என மாவட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. வேலாயுதம் உதயனுக்குத் தெரிவித்தார். [ப - 76]

## யாழ். பொலீஸ் அதிபரின் அலுவலகம் இடம் மாறும்

யாழ்ப்பாணம், மே 7

யாழ். கோட்டைக்குள் இருக்கும் யாழ் பொலீஸ் அதிபர் அலுவலகம் ஓரிரு வாரங்களில் வெளியே இடம் மாற்றம் செய்யப்படவிருக்கிறது.

கோட்டைக்குள் இந்த அலுவலகம் இருப்பதால் பொது மக்கள் அங்கு சென்று தம் வேலைகளை மேற்கொள்வதில் அசௌகரியம் நிலவுவதாகக் கூறப்படுகிறது. இதை நீக்கும் முகமாகவே யாழ் பொலீஸ் நிலையக் கட்டடத்துக்கு இந்த அலுவலகத்தை மாற்றுவது என்று தீர்மானிக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. (உ-3)

## வவுனியாவிலும் இருநேரம் பாடசாலை

வவுனியா, மே 7

வவுனியா மாவட்டத்திலும் பாடசாலைகளில் இருநேர வகுப்புகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற பணிப்புரை வழங்கப்பட்டதைத் தொடர்ந்து வவுனியா மகளிர் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளில் இருநேர வகுப்புக்கள் தொடங்கப்பட்டுள்ளன. [ஓ-164]

## மாகாணசபை ஊழியர் சம்பளம்

கொழும்பு மே 7

அடுத்த ஆண்டு முதல் மாகாண சபைகள் தங்கள் ஊழியர்களுக்கான சம்பளம், சம்பள முற்பணம் மற்றும் கொடுப்பனவுகளை அந்தந்த மாகாணசபைகளே வழங்க வேண்டும் என்று பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

## ஒழுங்கு நடவடிக்கை

கொழும்பு, மே 7

ஆளும் ஐக்கியதேசியக்கட்சியைச் சேர்ந்த 21 உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கான விசாரணை நடத்தப்பட இருக்கிறது.

இத்தகவலை ஐ.தே.க பொதுச்செயலாளர் ரஞ்சன் விஜேரத்னா தெரிவித்தார். [ஓ-எ]

## முழு ஆற்றலையும் பயன்படுத்தின் தமிழீழம் பொருளாதாரத்தில் சிறக்கும்

### தூரிகை தொழிற்சாலை திறப்பு விழாவில் உரை

யாழ்ப்பாணம், மே 7

ஈழத் தமிழர் ஒவ்வொருவரும் தம்மிடம் உள்ள ஆற்றலை முழுமையாகப் பயன்படுத்தினால் தமிழீழம் பொருளாதாரத்தில் சிறந்து விளங்கும். அது பொருளாதாரத் துறையில் தென்கிழக்காசியாவில் சிறந்து விளங்கவும் ஏதுவாகும்.

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. ராஜன் நேற்று கோண்டாவிலில் நடைபெற்ற பனம் மற்றும் தென்னம் தும்புகளைக் கொண்டு தூரிகை தயாரிக்கும் தொழிற்சாலை திறப்பு விழாவில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

விழாவுக்கு திரு. பொன்னையா துரைசிங்கம் தலைமை வகித்தார். இறந்த போராளியான சாந்தனின் தாயார் குத்துவிளக்கு ஏற்றி விழாவை ஆரம்பிக்க, தந்தை திரு. தருமலிங்கம் நாடாவை வெட்டி தொழிற்சாலையைத் திறந்து வைத்தார்.

பனை அபிவிருத்திச் சபையின் பிரதிநிதியான திரு. வி. ஜே. தங்கவேலு தமது உரையில், "இரண்டாம் உலக யுத்தத்தில் சிதறி சின்னாபின்னமாகிப் போன ஜப்பான் தற்பொழுது பொருளாதாரத் துறையில் வியத்தகு முன்னேற்றம் பெற்றிருக்கிறது. இதே போல் இவ்வாறான முயற்சிகள் எமது தமிழ் மண்ணையும் வளர்ச்சியடையச் செய்யும்"-

தமிழீழ ஆய்வு நிறுவனமான 'றூட்' சார்பில் பேசிய திரு எம். கிங்ஸ்லி தமது உரையில், "இதுவரை காலமும் லண்டன், நோர்வே, அவுஸ்திரேலியா ஆகிய இடங்களில் இயங்கி வந்த 'றூட்' தற்பொழுது யாழ். நகரில் தலைமைச் செயலகத்தை ஏற்படுத்தி முதல் நடவடிக்கையாக இந்த தூரிகை தொழிற்சாலையை அமைத்துள்ளது"- என்றார்.

வலிகாமம் பகுதி அரசியல் பொறுப்பாளர் ஆஞ்சநேயர் பேசுகையில் "நமது தமிழீழத்தில் வேறெங்கும் இல்லாத அளவு வளங்கள் உள்ளன. சிறந்த வல்லுநர்கள், ஆராய்ச்சியாளர்களும் உள்ளனர்.

ஆனால் அவர்கள் சரிவர பயன்படுத்தப்படுவதில்லை"- என்றார்.

விழாவில் கோப்பாய் கண்ணாடித்தொழிற்சாலை சார்பில் திரு. குகபாலன், திரு நெல்வேலி காகிதப்பொம்மை தயாரிக்கும் தொழிற்சாலை சார்பில் திரு. வி. சுந்தரமூர்த்தி, திரு. கே. கணேசலிங்கம் மற்றும் திரு. செல்வநாயகம் ஆகியோர் உரையாற்றினர்.

நல்லூர் பிரதேசப் பொறுப்பாளர் ரங்கன் நன்றியுரை வழங்கினார். (ஒ-9)

## சிறந்த தமிழ் நூல்களுக்கு பரிசில் வழங்க அரசு முடிவு

கொழும்பு மே 7

1981 முதல் 1988 இறுதி வரையும் 1989 ஆம் ஆண்டிலும் வெளியான தமிழ் நூல்களில் சிறந்தவற்றைத் தேர்ந்து எடுத்து பரிசுகளை வழங்க இந்து சமயகலாசார அலுவல்கள் துணை அமைச்சின் தமிழ் அலுவல்கள் பிரிவு முடிவு செய்துள்ளது

நாவல், சிறுகதை, நாடகம், கவிதை, இலக்கியத்திறனாய்வும் விமரிசனமும், சிறுவர் இலக்கியம், சமூகவியலும் மானிடவியலும், அறிவியல் மற்றும் ஏனைய துறைகளைச் சேர்ந்த நூல்களுக்கு இப்பரிசுகள் வழங்கப்படும்.

நூலை எழுதியவர் இலங்கையராக இருக்கவேண்டும். இலங்கையில் நூல் அச்சிடப்பட்டிருக்கவேண்டும்.

அமைச்சு நியமிக்கும் மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகளுக்கும் எடுத்துரைகளுக்கும் அமைய பரிசுகள் வழங்கப்படும்.

நூல்தனை எழுதி வெளியிட்ட நூலாசியர்களோ, வெளியீட்டாளர்களோ ஒவ்வொருநூலிலும் ஐந்து பிரதிகளை மே 21 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக தமிழ் அலுவல்கள் பிரிவு, இந்துசமய கலாசார துணை அமைச்சர் அலுவலகம், 9 ஆவது மாடி, றக்ஷண மந்திரய, 21, வோக்ஷால் வீதி கொழும்பு-2 என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கும்படி அமைச்சுச் செயலாளர் கே. வி. லோகேஸ்வரன் கோரியுள்ளார்.

நூல்களை அனுப்பும் உறையின் இடதுபுற மூலையில் "தமிழ் நூற்பரிசுத் தேர்வு" என்ற வாசகம் எழுதப்பட்டிருத்தல் வேண்டும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

பரிசுகள் 1991 ஜூலை மாதத்தில் அமைச்சு நடத்த உள்ள தமிழ் இலக்கியப் பெருவிழாவில் வைத்து வழங்கப்படும். (ஒ—எ)

## சந்திரிகா லண்டன் பயணம்

கொழும்பு மே 7

திருமதி சந்திரிகா குமாரரணதுங்கா சடந்த வெள்ளிக்கிழமை லண்டன் சென்றார்.

அடுத்த இரண்டு மாதங்களில் அவர் கொழும்பு திரும்புவார் அதன் பின்னர் இலங்கையிலேயே நிரந்தரமாக வசிப்பார்.

ஸ்ரீலங்கா மக்கள் கட்சி (வி) பிரிவு பேச்சாளர் ஒருவர் இத்தகவலைத் தெரிவித்தார். (ஒ-எ)

### கிளிநொச்சியில்

## அ. அதிபர் வீட்டுக்கு முன்னால் நடந்த விபத்தில் ஒருவர் பலி

கிளிநொச்சி, மே 7

கிளிநொச்சி அரச அதிபரின் வாசஸ்தலத்திற்கு முன்னால்நேற்று நண்பகல் இடம் பெற்ற விபத்து ஒன்றில் ஒருவர் மரணமானார்

மிருசுவிலைச் சேர்ந்தவரும் கிளிநொச்சி டிப்போ முகாமையாளருமான அப்பாபிள்ளை தியாகராசா [வயது 59]என்பவரே உயிரிழந்தவராவர்.

இவர் வந்த சைக்கிள் 'எல்வ்' வாகனம் ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளானதாகச் சொல்லப்பட்டது. [உ-9]

### இந்திய வம்சாவளி மக்களை

## இந்தியாவுக்கு அனுப்பும் முயற்சியை எதிர்க்கிறோம்

### ஈ. பி. ஆர். எல். எவ். அறிக்கை

கொழும்பு மே 7

"இந்தியப் பிரஜாவுரிமை வழங்கப்பட்ட இந்திய வம்சாவழி மக்களை இந்தியாவுக்கு அனுப்ப நிர்ப்பந்திக்கும் சகல முயற்சிகளையும் நாம் எதிர்க்கின்றோம். அவர்கள் இந்தியா செல்ல விரும்பவில்லை. அங்கே அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிப்பதற்குத் திட்டவட்டமான திட்டங்களும் கிடையாது."

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் ஈ. பி. ஆர். எல். எவ். மத்தியக் கமிட்டி வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை ஒன்றில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

அறிக்கை மேலும் கூறுவதாவது:- "இந்திய வம்சாவளிப் பெருந்தோட்டத் தமிழரின் எதிர்கால வாழ்வு சம்பந்தப்பட்ட 1964 ஆம் ஆண்டின் சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் இந்த மக்களைக் கலந்தாலோசியாது செய்யப்பட்டு அவர்கள் மீது திணிக்கப்பட்ட ஒரு ஓரபட்சமான ஒப்பந்தமாகும்."

"இந்தியப் பிரஜாஉரிமை வழங்கப்பட்ட மக்களை 1982 இல் நாடு கடத்துவதாக இருந்தது. ஆனால் இலங்கை இன நெருக்கடியைச் சமாளிக்கத்தொடர்ந்து ராணுவத் தீர்வு என்ற முறையைக் கடைப்பிடித்து வந்ததால் அவர்களை நாடு கடத்த முடியவில்லை. கடந்த 8 ஆண்டுகளில் இந்த இந்திய வம்சாவளி மக்கள் இலங்கையில் தமது சேமிப்பை முதலீடு செய்து தமது வாழும் முறையை மாற்றியுள்ளார்கள்" எனவும் அறிக்கை கூறுகின்றது. (க)

## உள்ளூராட்சி மன்ற தேர்தல் ஜூலையில்

கொழும்பு, மே. 7

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் எதிர்வரும் ஜூலை முதல் வாரத்தில் இடம் பெறும் என்று பாதுகாப்புத் துணை அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா தெரிவித்தார். (ஒ-எ)

## சட்ட விரோத மின் தொடர்பை துண்டித்த ஊழியர் மீது தாக்கு!

### அதனைத் தொடர்ந்து பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், மே 7

சட்டவிரோத மின்சாரம் பெறுவது மட்டுமன்றி, அதனைத் தடுக்க முயற்சிப்போரைப் பழிவாங்கவும் சிலர் முனைகிறார்கள். அவ்வாறான சம்பவம் ஒன்று நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட இடம் ஒன்றில் நிகழ்ந்துள்ளது;

கொக்குவில் ரயில் நிலையத்துக்குச் சமீபமாக, சட்டவிரோத மின்சாரம்பெற்ற ஒரு ஸ்தாபனத்தில், [illegible] தைத் துண்டிக்கச்சென்ற மின் ஊழியர் ஒருவர் [illegible] கிழமை காலை தாக்கப்பட்டார்.

அதனைத்தொடர்ந்து சம்பந்தப்பட்ட பிரதேச சபையைச் சேர்ந்த மின்சார ஊழியர்கள் அன்று வேலைக்குச் செல்லாது பகிஷ்கரித்தனர்.

சம்பந்தப்பட்ட ஸ்தாபனத்துக்கு ஆறுமாதங்களுக்குமுன் மின் இணைப்புத் துண்டிக்கப்பட்டது. அதன் பின்னர் [illegible] இணைப்பைப் பெற்றிருந்தார்.

இதனை அறிந்து நல்லூர் பிரதேசசபை மின்சாரப்பகுதி ஊழியர், சட்டவிரோத மின் இணைப்பைத் துண்டித்தார். அதற்காக மின்சாரப் பகுதி ஊழியர் தாக்கப்பட்டார். அதனை ஆட்சேபித்தே மின்சார ஊழியர் அனைவரும் வேலைக்குச் செல்லாது பகிஷ்கரித்தனர். [அ-69]

## மரண அறிவித்தல்கள்

### அப்பாப்பிள்ளை தியாகராசா

எழுதுமட்டுவாளை பிறப்பிடமாகவும், மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வட பிராந்திய போக்குவரத்துச் சபை கிளிநொச்சி சாலை முகாமையாளருமான அப்பாப்பிள்ளை தியாகராசா நேற்று (6-5-90) கிளிநொச்சியில் அகாலமரணமானார்.

இவர் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை, திருமதி நல்லினாச்சார் ஆகியோரின் மூத்த மகனும், பொன்னம்மா (பசுபதி) வின் அன்புக் கணவரும், தி. சிவராம் (பாதுகாப்பு உத்தியோகத்தர், வ.பி.போ.ச., பருத்தித்துறை), தி. சிவநடேசன் (சென். திரேசா பாடசாலை, கிளிநொச்சி), காலஞ்சென்ற சிவநிதி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற அ. ஏகாம்பரம், அ. தில்லைநாதன் (மாகாண அமைச்சு, திருகோணமலை), காலஞ்சென்ற அ. நடேசபிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி சிவராம், திருமதி சிவநடேசன் ஆகியோரின் மாமனாருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை 8-5-90 காலை 10-00 மணிக்கு கிளிநொச்சி இரத்தினபுரத்தில் நடைபெறும்.

தகவல்:
மனைவி— திருமதி தி. பொன்னம்மா
மகன்மார்— தி சிவராம், தி.சிவநடேசன்
[13117]

### செல்லத்துரை இளையதம்பி (வாப்பா)

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த செல்லத்துரை இளையதம்பி 6-5-90 இல் காலமானார்.

அன்னார் சத்தியதேவியின் அன்புக் கணவரும், கஜதீபன், ஜலஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், சரஸ்வதி, நாகேஸ்வரி, சின்னத்தம்பி, பூபதி, மகேஸ்வரி, சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், க. ஞானசெல்வத்தின் மருமகனுமாவார்.

ஈமக்கிரியைகள் 07-05-1990 பிற்பகல் 2-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
செ. சின்னத்தம்பி (சகோதரன்)
உடையார் வளவு,
புன்னாலைக்கட்டுவன் [13118]

### விக்டோறியா ஜெயமணி

விக்டோறியா ஜெயமணி 05-05-90 இல் காலமாகி விட்டார். இவர் வேலாயுதபிள்ளையின் (இளைப்பாறிய மதுவரித் திணைக்கள உத்தியோகத்தர்) அன்பு மனைவியும், காலம்சென்ற அரசரெட்டினம், அந்தோனிப்பிள்ளை (ஆசிரியை) பொன்றோஸ், காலம்சென்ற பொன்மணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ராசம்மா, கனகம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிர்மலா, ஜெகநாதன் U.K., பத்மநாதன் U.K., ஆசீர்நாதன் U.K., நாதன் (கனடா), சறோஜினி, கமலநாதன் (கனடா), சுபோதினி (கனடா), விஜயநாதன் U.K., ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம்சென்ற முத்துக்குமார், சிறி, விசி, லிண்டா, மாலினி, ரெட்ணகுமார் (டோகா), சுரேஷ் (சவூதி) ஆகியோரின் அன்பு மாமியாரும், நிரோஷ்குமார், தர்ஷன், f பியோனா, டீன், றொகான், நிஷாந்தி, கிருஷாந்தி, ஷோண், டறன், டிலான், றஜீவ், Brownson ஆகியோரின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
வேலாயுதபிள்ளை
15, சந்தானமாதா கோவில் வீதி,
பாண்டியந்தாழ்வு,
யாழ்ப்பாணம். [13107]

### திருமதி இராசையா இராசலட்சுமி

231 கோவில் வீதி, நல்லூரைச் சேர்ந்த திருமதி இராசலட்சுமி 6 - 5 - 90 இல் காலமானார். இவர் இளைப்பாறிய லிகிதர் துரையப்பா இராசையாவின் அன்பு மனைவியும் திருமதி கௌரியின் அன்பு தாயாரும் திரு. சிவாஜியின் அன்பு மாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 7. 5. 90, 2.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைகளுக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
து. இராசையா
231, கோவில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (13111)

### அப்பாப்பிள்ளை தியாகராசா

மிருசுவில் வடக்கைச் சேர்ந்த அப்பாப்பிள்ளை தியாகராசா (வ. பி. போ. ச. சாலை முகாமையாளர், கிளிநொச்சி) 06-05-1990 இல் அகால மரணமானார்.

தகவல்:
ஊழியர் நலன்புரிச் சங்கம்
வ. பி. போ. சபை,
கிளிநொச்சி. [13113]


## அழைப்பிதழ்

இலங்கை
செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். பிரிவு

செஞ்சிலுவை தினம் 08-05-1990

எமது சங்க அங்கத்தவர்களையும், ஆதரவாளர்களையும் சங்க பணிமனையில் நடக்கும் நிகழ்ச்சிகளில் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

—தலைவர்
(சி/4501)

## புது விற்பனை நிலையம்
ஆரம்பம்:- 07- 05- 1990
★★★★★★★★★★★★★★★★★★★★★★

MODERN WEAR

★ பெண்கள்
★ சிறுமிகளுக்கான
நவீன ஆடைகள்
விற்பனை ஆரம்பம்.

இடம்:-
334, கோவில் வீதி,
நல்லூர்.
(13108)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07-05-1990இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org